2017 - இதழ் 10

இலவசம்

**ஐப்பசி 2017**

# உள்ளான மனிதன்

**e-copy**

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

**e-copy**

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2017 - இதழ் 10


## இந்த இதழில்...


### 2 அன்பும் பயமும்

அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

### 4 சந்தர்ப்பங்கள்...

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

### 8 பிரசங்கக் குறிப்புகள்

ஒரு இடத்திற்கு போவதற்குரிய வழியை நான் கண்டடைய வேண்டும் என்றால், நான் எங்கே நிற்கின்றேன், நான் எங்கே போகப் போகின்றேன் என்ற இரண்டு நிலைகளையும் அறிந்திருக்க வேண்டும்.

### 10 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் ற்ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurchnet.ca

# அன்பும் பயமும்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல என்று பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம். தேவனுக்கு பயப்படுபவன் என்று மனிதர்களைக் குறித்து நற்சாட்சி சொல்லப்படுவதையும் பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம். யோபுவைக் குறித்து தேவன் சாட்சி கொடுக்கையில் அவன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனும் என்று கூறியுள்ளார். இங்கு தேவ வார்த்தையானது முரண்படுகின்றதா? இல்லை, அது முரண்படவில்லை.

வாழ்க்கை நடைமுறையிலுள்ள நிகழ்வொன்றை உதாரணமாக ஆராய்ந்து பார்ப்போம். வீதி போக்கு வரவு ஒழுங்கை யாவரும் அறிந்திருக்கின்றார்கள். வீதிகளில் வேக அளவின் எல்லையானது குறிக்கப்பட்டுள்ளது. பொலிசாரைக் காணும் போது யாவரும் வாகனத்தின் வேக எல்லையை பேணுகின்றார்கள். பொலிசார் பிரசன்னமாய் இல்லாத போது பலர் வேக எல்லையை மீறுகின்றார்கள். தண்டனை கிடைக்கும் என்று பொலிசாரைக் கண்டு பயந்து வேக எல்லையைப் பேணுபவர்கள் உண்மையாய் ஒழுங்கிற்கு கீழ்ப்படிபவர்கள் அல்ல.

இதே போன்று ஒருவன் பயப்படுவதால் தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவனாயிருந்தால் அவனிடத்தில் நீதி இருக்காது. மாறாக பயமே கணப்படும். ஒருவன் தேவனை அன்பு செய்கின்றவனாக இருந்தால், அந்த அன்பின் நிமித்தம் தேவனுக்கு உண்மையாய் வாழும்படி நீதியை விரும்பி அதை செய்கின்றான். யோபுவைக் குறித்து கூறப்பட்ட வார்த்தையானது, அவன் தேவனை நேசித்து கனம்பண்ணி அவரது மாட்சிமைக்கும் இராஜரீகத்துக்கும் உத்தமமாய்க் கீழ்ப்படிந்ததைக் குறிக்கின்றது.

**பயத்தினால் ஒருவன் தேவ காரியங்களை நிறைவேற்றுபவனாக இருந் தால் அவனது வாழ்க்கையில் சந்தோஷமிராது, மாறாக வேதனையே காணப்படும்.**

இயேசு கிறிஸ்துவும் தன் சீஷரிடத்தில், நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று கூறினார். ஆகவே மனிதர் தேவ கற்பனைகளைக் கைக்கொள்ளுவது தேவனிடத்திலுள்ள அன்பால் நடைபெற வேண்டும்.

- **தேவனை அன்பு செய்கின்றேன் என்று சொல்லியும் அவரது கற்பனைகளை ஒருவன் அசட்டைபண்ணினால் அவனது அன்பு பொய்யானது.**
- **தேவனின் கற்பனைகளுக்கு கீழ்படிகின்றேன் என்று சொல் லும் ஒருவன் தேவனை அன்பு செய்யவில்லையானால் அவ னிடத்தில் உண்மையில்லை.**

# தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசு-வாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்த ருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திரு க்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கி றவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்தி ருக்கிறார்.

நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது.

அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

தேவன் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

பிரியமான சகோதரனே சகோதரியே உன் வாழ்க்கையிலே நீதியும் சந்தோஷமும் நிறைவாய் உண்டாக தேவனின் அன்பை எற்றுக் கொண்டு அவரை விசுவாசித்து அன்பு செய். அவரது அன்பு உன்னில் பெருகும்படியாய், இயேசுவே எனது வாழ்வில் வாரும், என்னை உமது பிள்ளையாய் எற்றுக்கொள்ளும் என்று கூறுவாயாக. தேவன் அன்பா கவே இருக்கிறார்.

ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலி ருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார்.

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# சந்தர்ப்பங்கள்...

“**என்னுடைய வேலையை எப்படி செய்வதென்று நீ எனக்கு சொல்லித் தரத் தேவையில்லை**” என சிரேஷ்ட உறுப்பினரைப் பார்த்து புதிதாக காரியாலயத்தில் சேர்ந்த வாலிபன் கூறினார். இருவருக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல், வாலிபனுக்கு பிடித்த முறையில் செல்லாதபடியாலும், அவன் தன் கோபத்தை அடக்கி வைக்க முடியாமல், தன் குரலை எழுப்பி, அந்த சிரேஷ்ட உத்தியோகஸ்தருக்கு அருகில் உள்ளவர்களுக்கும் கேட்கும்படியாக கடிந்து கொண்டான். சில மணித்தியாலங்கள் கழிந்து மதிய வேளையான போது, அந்த வாலிபன் தன் பிழையை உணர ஆரம்பித்தான். தன்னுடைய அபிப்பிராயம் எப்படியிருந்தாலும், தன்னில் வயது முதிர்ந்த ஒருவருக்கு, அவருடைய வேலையாட்களுக்கு முன்பாக தான் தரக்குறைவாக பேசினேன் என்று வருந்தினான். மாலை வேலை முடிவடையும் நேரத்திற்கு முன், அந்த வாலிபன், சிரேஷ்ட உறுப்பினரிடம் சென்று,

***வாலிபன்:*** *நான் இன்று உங்களுடன் நடந்து கொண்ட தகுதியற்ற நடத்தைக்காகவும், முறையற்ற பேச்சுக்காவும் மனம் வருந்துகின்றேன். என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறினான்.*

***சிரேஷ்ட உறுப்பினர்:*** *மகனே! நீ இப்படி உட்காரு. நீ இன்று உன்னை தாழ்த்தி என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டது, உன்னுடைய மனநிலையையும், நீ எப்படிப்பட்டவன் என்பதையும் காட்டுகின்றது. உன்னுடைய வேலையை மிகவும் கடினமாக்க என்னால் முடியும். இனி நான் அப்படிச் உனக்கு செய்யப் போவதில்லை. ஆனால் இனி மேல் உன் பொறுமையை காத்துக் கொள் என்று அறிவுரை கூறினார்.*

அன்று காலை, அந்த வாலிபன், சிரேஷ்ட உறுப்பினரோடு பேசும் போது, அந்த சந்தர்ப்பத்தில் தன் கோபத்தை அடக்கி, பொறுமையுடன், அந்த மூத்த உறுப்பினரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து தன் குரலை எழுப்பாமல், அந்த சிரேஷ்ட உறுப்பினருக்கு செவி கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், அவன் அந்த சமயத்தை ஞானமாக மேற் கொண்டிருப்பான். ஆனால் அவன் அந்த சந்தர்ப்பத்தில் தன் கீழ்ப்படிவையும் பொறுமையையும் வெளிப்படுத்துவதற்கு பதிலாக, தன் கோபத்தையும் பெருமையையும் வெளிக்காட்டினான். எனினும் அவன் பின்பு தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல்,

**அந்த சிரேஷ்ட உறுப்பினரோடு ஒப்புரவாகும்படி தக்க சமயத்திலே முடிவெடுத்து அதை செயற்படுத்தினான்.**

இப்படியாக இப்பூவுலகிலே நாளாந்தம் பல சந்தர்ப்பங்கள் எங்களை நோக்கி வருகின்றது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று சொல்லி அநேகர் தங்கள் பக்கமாய் வரும் சந்தர்ப்பங்களை நழுவ விடுவதில்லை. எல்லா சந்தர்ப்பங்களும் எங்களுக்கு நன்மையை தரப் போவதில்லை. எனவே எங்கள் சந்தர்ப்பங்களை அலசி ஆராய்ந்து தேவ சித்தம் எதுவோ அதையே நாங்கள் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆதியிலே தேவன் மனிதர்களை படைத்த போது. எப்போதும் நன்மை செய்யும் தேவன், குறிப்பிட்ட ஒரு கனியை புசிக்க வேண்டாம் என ஆதாம் ஏவாளிற்கு கட்டளையிட்டிருந்தார். அப்பொழுது சர்ப்பமாகிய சாத்தான் ஸ்திரீயாகிய ஏவாளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கினான்.

சாத்தான்: *நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.*

தேவ கட்டளைகள் அலசி ஆராயப்பட வேண்டியவைகள் அல்ல. ஆனால் இந்தப் பூலோகம் தரும் அழைப்புக்கள் யாவும் தேவ கட்ட ளைக்குள் அலசி ஆராயப்பட வேண்டும். அந்த சமயத்திலே, பிசாசின் அழைப்பு, தேவ கட்டளைக்கு நேரடியாகவே விரோதமாக இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அவள், அப்பாலே போ சாத்தானே, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளைக்கு விரோதமாக நான் செய்யமா ட்டேன் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் அந்த ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தி யைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான். தேவ கட்டளையை மீறி பிசாசான வனிற்கு கீழ்ப்படிந்தார்கள். இதைப் போலவே புசிப்புக்கு நல்லதும், பார் வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத் தக்கதாக தோன்றும்படியாய் மாம்சத்தின் கிரியைகளாகிய விப சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூ னியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்- டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலை கள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகள் எங்களுக்கு சமர்ப்பி க்கப்படுகின்றது. இவைகளை தேவ கட்டளை களுடன் ஆராய்ந்து பாருங்கள். தேவ கட்டளைகளை அறிவதற்கு பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள். அவற்றை உங்கள் வாழ்கையில் எப்பொழுதும் கை கொள்ளுங்கள். உங்களை நோக்கி வரும் சந்தர்ப்பங்கள் தேவ

சித்ததிற்குட்பட்டதாயிருந்தால் அவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். தேவ சித்தத்திற்கு முரணானதாக இருந்தால், அந்த சந்தர்ப்பங்களில், உங்கள் பேச்சில், சிந்தையில், நடத்தையில் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியான கிரியைகளை நடப்பியுங்கள்.

உதாரணமாக உங்கள் குடும்பத்திற்கு துரோகம் செய்த ஒருவருக்கு உங்கள் உதவி அவசரமாக தேவைப்படுகின்றது. ஆனால் உங்களுக்கு அவர் செய்த துரோகம் பெரியது. இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்வீர்கள்? நீங்கள் அவருக்கு உதவி செய்யாவிட்டாலும் உங்களை இந்த உலக போக்கின்படி நடக்கிறவர்கள் குற்றம் சொல்ல மாட்டா ர்கள். ஆனால் தேவ நியமங்களின்படி, அன்றியும், உன் சத்துரு பசியா யிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு என்று எழுதப்பட்டிருக்கின்றது. அக்கினி தழலை அவர்கள் மேல் குவிப்பது எங்கள் நோக்கமல்ல, துரோகியாய் வாழ்ந்த எங்களுக்கு வெளிப்பட்ட கிறிஸ்துவின் அன்பை நாங்கள் அந்த மனிதனுக்கு வெளிக்காட்டும் நல்ல சந்தர்ப்பமாக அதை மாற்றி விடவேண்டும்.

சவுல் என்னும் ராஜா, தாவீது என்னும் இளைஞனை கொன்று போடும்படி, படைகளோடு, மலைகளிலும் கெபிகளிலும் அவனை தேடிச் சென்றான். அந்த சவுல் ராஜா மாண்டு போகும்படி தாவீதிடம் அகப்பட்ட சந்தர்ப்பம் உண்டு. ஆனால் தாவீது தேவனை நேசித்த படியால், தன்னைக் கொல்லத் தேடும் ராஜாவை கொன்று போடாமல், தேவனுடைய வேளைக்கு காத்திருக்கும்படி அவனை விட்டுவிட்டான்.

**தாவீது, தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நழு வவிடாமல், அந்த சந்தர்ப்பத்திலே, தான் தேவ னுக்கு பயந்து அவர் கற்பனைகளுக்கு கீழ்படி க்கின்ற மனிதன் என்பதை தன்னுடன் இருப்ப வர்களுக்கு நிரூபித்தான்.**

கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே தம் பணியை ஆரம்பிக்கும் நாட்கள் வந்தபோது, பிசாசானவனினால் 40 நாட்கள் இரவும் பகலும் சோதிக்கப்பட்டார். முதலாவதாக இயேசு தன்னை தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கும்படி கற்களை அப்பங்களாக மாற்றும்படி கேட்டான். பின்பு நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும். ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய

தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டுபோவார்கள் என்றும் எழுதியிருக்கிறது என்றான். கடைசியாக உலகத்திலுள்ள அதிகாரத்தையும், மகிமையையும் தருவேன் என்று சொல்லி தன்னைப் பணிந்து கொள்ளும்படி சொன்னான். இயேசுவோ பிசாசிற்கு தன் வாழ்க்கையில் எதையும் நிரூபிக்க வேண்டியதாக இருக் கவில்லை, அவனிடம் இருந்து எதையும் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏதும் இருக்கவில்லை. ஏனெனில் அவன் ஆரம்பத்திலிருந்து பொய்க்கு பிதா என்று அவர் அறிந்திருந்தார். இந்த சந்தர்ப்பங்களிலே, பிசாசு சொன்னபடியே செய்யாததால், அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய குமாரன் “தான்” என்பதை யாவருக்கும் திட்டமாக வெளிப்படுத்தினார்.

பிரியமானவர்களே, எங்கள் வாழ்க்கையை நோக்கி வரும் சந்தர்ப்ப ங்களை நழுவவிடாமல், அந்த சந்தர்ப்பங்களிலே நாங்கள் தேவனு டைய பிள்ளைகள் என்பதையும், தேவனுடைய சித்தத்தையே செய் வோம் என்பதையும், எங்கள் கிரியைகளால் பரம பிதாவுக்கு மகிமை ஏற்படும் என்பதையும் நாங்கள் காண்பிக்க வேண்டும்.

## எல்லா சந்தர்ப்பங்களிலும், திவ்விய சுபாவமா-கிய ஆவியின் கனியாகிய, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் வெளிப்-பட வேண்டும்.

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளு ங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகு ங்கள். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமா க்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (1 தெசலோனிக்கேயர் 5:21-23)

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக! ஆமேன்.**

# அழைப்பிற்கு பாத்திரராக...

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : எபேசியர் 4:1-3

யோவான் ஸ்நானன் தேவனாலே முன்குறிக்கப்பட்ட மனிதன். அவன் இயேசு கிறிஸ்து முன்பாக அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி வந்தான். ஏன் பாதையை ஆயத்தப்படுத்த வேண்டும்? இயேசு கிறிஸ்து மனிதர்களை இரட்சிக்கும்படி இந்தப் பூமிக்கு வந்தார். ஆனால் இங்கே அவருக்கு பாதையை ஆயத்தப்படுத்தும்படி இந்த மனிதன் அனுப்பப் பட்டான். இரட்சிப்பு இலவசமாக இருக்கின்ற போதிலும், அது தெரு விலே இருக்கும் ஒரு பொருள் போல அசட்டை பண்ணப்படும் விடயம் அல்ல. இரட்சிப்பை கொடுப்பவர் தேவன். ஒருவன் பாவத்திலிருந்து இரட்சிப்பை பெற விரும்பினால், அதைக் குறித்து வாஞ்சையுள்ள வனாக இருக்க வேண்டும். அப்படிபட்டவன் தன் இருதயத்தை, பலன் கொடுக்கும் நிலம் போல அதை பக்குவப் படுத்த வேண்டும். ஒருவனை பலவந்தமாக பிடித்து, நான்தான் தேவன், இதுதான் இரட்சிப்பு, என்று மனந்திரும்ப விரும்பமில்லாத இருதயமுடையவனுக்குள் திணிப்பவர் அல்ல. தேவன் மனிதர்களை ஒரு இயந்திரம் போல படைக்கவில்லை, சுதந்திரமுள்ளவர்களாக படைத்தார். நாங்களும் அவ்வண்ணமாகவே சிருஷ்டிக்கப்பட்டோம். இன்று எங்களுடைய இதயத்தின் எண்ணமும் நோக்கமும் தேவன் எங்களுக்கு வைத்திருக்கும் இரட்சிப்பை பற்றிகொ ள்ளும்படி வாஞ்சையுள்ளதாக இருக்க வேண்டும்.

நான் கடைக்கு போகின்றேன், அங்கு என்ன இருக்கின்றது என சும்மா பார்க்கப் போகின்றேன். அங்கு ஏதாகிலும் இருந்தால் நான் வாங்குவேன் என்று கடைக்கு போகின்றவர்கள் போல எங்களது வாழ்க்கை இருக்கலாகாது. நாங்கள் தேவ சமுகத்திற்கு வரும் போது, குறிப்பாக எதையும் பெற்று கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையோடு வரவேண்டும். தேவன் ஒருவரே எங்கள் மனதின் வாஞ்சையை நிறைவேற்ற வல்லவராயிருக்கின்றார்.

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களில், பரிசேயர் சதுசேயர் என்னும் மதம் சார்ந்த குழுவினர் அவரிடம் வந்தார்கள். இயேசு உயிர்த்தெழுதலை நம்பாத சதுசேயரின் வாயை அடைத்தார் என்று பரிசேயர் கண்ட போது சந்தோஷப்பட்டார்கள். ஆனால், பரிசேயரில் பலர், தாங்கள் இரட்சிப்பை கண்டடைய வேண்டும் என்ற மனதுடன்

இயேசுவிடம் வரவில்லை. அந்த நாட்களிலே பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ இயேசுவை தேடி வந்தாள். தான் எப்படியாவது இயேசுவிடமிருந்து சுகத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்து, அதை பெற்றுக் கொள்ளும்படியாய் பிரயாசப்பட்டாள். இப்படியாக பலவிதமான பிணியாளிகள் கர்த்தராகிய இயேசுவை தேடி வந்தார்கள். அவரிடம் பெற்றுக் கொள்ளும்படி இவர்களுடைய இருதயம் ஆயத்தப்பட்டிருந்தது.

இரட்சகர் வருகின்றார், உனக்கு இரட்சிப்பு வேண்டுமாயின், நீ விழிப்படைய வேண்டும், மனந்திரும்பு, இந்த நாளுக்காக ஆவலோடு காத்திரு. இதே போலவே யோவான் ஸ்நானன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உலகத்தை பாவத்திலிருந்து மீட்டு, இரட்சிப்பவர் வருகின்றார் என்ற விழிப்புணர்வை மனிதர்களுக்கு கொடுக்கும்படியாய் வந்தான். என்னுடைய சிந்தை எப்போதும் கர்த்தரின் வருகைக்காக காத்திருக்க வேண்டும். என் இருதயம் எப்போதும் என் மீட்பரை ஏற்றுக் கொள்ளும்படி ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் தேவன் தாமே எங்கள் வாழ்க்கையில் பலத்த கிரியைகளை செய்வார்.

ஒரு இடத்திற்கு போவதற்குரிய வழியை நான் கண்டடைய வேண்டும் என்றால், நான் எங்கே நிற்கின்றேன், நான் எங்கே போகப் போகின்றேன் என்ற இரண்டு நிலைகளையும் அறிந்திருக்க வேண்டும். இன்றைய நாளிலே, நாங்கள் போக வேண்டிய இடம் பரலோகம் என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆனால் நாங்கள் இன்று எங்கே நிற்கின்றோம்? எங்கள் சிந்தையும் இருதயமும் எங்கே என்பதை அறியாவிட்டால், நான் போக வேண்டிய பாதையை அறியமாட்டோம். கர்த்தரை அறியமுன், அக்கிரமங்களும் பாவமும் எங்களை மரணத்திற்குள்ளாகக் கட்டி வைத்திருந்தது. இப்போது நாங்கள் இந்த பழைய இடத்தில் இருக்கின்றோமா? அல்லது தேவன் அழைத்த பாதையில் முன்னேறிச் செல்கின்றோமா? எங்கள் சிந்தையும் இருதயமும் தேவனுடைய வழியிலே இருக்க வேண்டும். தேவ காரியங்களை வாஞ்சிக்க வேண்டும். அவற்றை நாடித் தேட வேண்டும்.

நாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்க வேண்டும். மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

**[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை எங்கள் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]**

# வழிகளை ஆராய்ந்து பாருங்கள்...

**புலம்பல் 3:40**
**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.**

மிகப்பரந்த நிலமுள்ள தேசமொன்றிலே வாழ்ந்த நண்பர்கள் சிலர், விடுமுறைக்காக, தங்கள் மாநிலத்திலிருந்து இன்னுமொரு மாநிலத் திற்கு, மோட்டார் வண்டி வழியாக செல்ல தீர்மானித்தார்கள். பல மணித்தியாலங்கள் வாகனத்தை ஓட்ட வேண்டியிருந்ததால், ஒவ்வொ ருவராக மாறி மாறி ஓட்டினார்கள். நடு ஜாமம் கடந்து வண்டியை ஓட்டி வந்தவர், நித்திரை மயக்கத்தில், போக வேண்டிய மாநிலத்தி ற்குரிய தெருவிற்கு திருப்பாமல், இன்னுமொரு தெருவிற்கு திருப்பி விட்டார். காலையில் எழுந்த நண்பர்களுக்கு செல்ல வேண்டிய மாநிலம் புதிதாக இருந்ததாலும், செல்லுமிடமெங்கும் மரங்களும் வயல்வெளிகளுமாயிருந்ததால், அவர்கள் அந்த மாநிலத்திற்கு செல் லும் வழி அப்படித்தான் இருக்கும் என எண்ணினார்கள். சில மணித்தி யாலங்களின் பின் ஒரு பட்டணத்தை நெருங்கிய போது, தாங்கள் ஏறத்தாழ *8* மணித்தியாலங்கள் பிழையான திசையிலே வந்துவிட் டோம் என உணர்ந்தார்கள். பிரியமானவர்களே, பல காலங்களாக கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம், நாங்கள் அப்பவும் இப்படித்தான், இப்பவும் இப்படித்தான் என்று உங்கள் உள்ளத்தில் தீர்மானித்து, நீங்கள் செய்வது எப்போதும் சரி என்று எண்ணிக் கொண்டி ருக்காதிருங்கள். அவ்வப்போது உங்கள் வழியை ஆராய்ந்து பாருங் கள். உங்கள் வாழ்க்கை தேவனுடைய வார்த்தைக்கு ஒத்திருக்கின் றதா? தேவ சத்தத்தை கேட்டு கீழ்ப்படியும் மனதிருக்கின்றதா? வரும் வழியில் திசை மாறி பிழையான வழியில் சென்று மாம்ச சத்தத்தை, தேவ சத்தம் என்று எண்ணி வாழ்ந்து வருகின்றேனா என்று ஆராய் ந்து பாருங்கள். வாழ்க்கையிலே தவறுகள் வரலாம், ஆனால் நாங்கள் எப்படிப்பட்ட சிரேஷ்ட உறுப்பினராக இருந்தாலும், தாழ்மை உள்ள இருதயத்தோடு எங்கள் வழியை ஆராய்ந்து பார்த்து கர்த்தரிடம் திரும்ப, பழகிக்கொள்ள வேண்டும்

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் போகும் வழி எப்போதும் சரி என இறுமாப்பு கொள்ளாது, தாழ்மையுள்ள இதயத்தோடு, உம்மை எப்போதும் பின்பற்றி வர எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# ஞானத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

**நீதிமொழிகள் 9:9**
**ஞானமுள்ளவனுக்குப் போதகம்பண்ணு, அவன் ஞானத்தில் தேறுவான் நீதிமானுக்கு உபதேசம்பண்ணு, அவன் அறிவில் விருத்தியடைவான்.**

நீங்கள் என்ன விஷயமாவது அவனுடைய வாழ்க்கையைக் குறித்து சொல்லிப் பாருங்கள், அவனிடத்தில் தப்பி பிழைப்பதற்கு, ஏதாவது ஒரு பதில் இருக்கும், வலு கெட்டிக்காரன் என்று தன்னுடைய இளைய மகனைக் குறித்து பெருமையாக ஒரு தந்தை பேசிக் கொண்டார். பரிசுத்த வேதாகமத்திலே, சங்கீதம் நீதிமொழிகள், பிரசங்கி போன்ற புத்தகங்களிலே பிரத்தியேகமாக ஞானத்தை கண்டடையும் வழியையும், அதை சம்பாதித்துக் கொள்பவர்களின் முடிவையும், பரியாசத்தையும், துன்மார்க்கத்தையும் அவைகளை பற்றி கொள்பவர்களின் குணாதிசயங்களையும், அதன் முடிவையும் குறித்து மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. ஞானத்தை நாடித் தேடுகிறவர்களின் வாழ்வில், முதலாவதாக தேவ பயம் இருக்கும். அதை அசட்டை பண்ணுகின்றவர்கள், தங்கள் வாழ்வில் ஞானத்தை கண்டடையும் வழியை தள்ளிப் போடுகின்றார்கள். ஞானமானது பல வழிகளிலே எங்களுக்கு போதிக்கப்படுகின்றது. வேத வாசிப்பும் வேதப் படிப்பும், ஜெபம், மற்றும் ஞாயிறு தோறும் ஞானத்தின் வழிகள் எங்களுக்கு போதிக்கப்படுகின்றது. இவைகளை வெறுக்கின்றவர்கள், தங்கள் வாழ்வில் ஞானத்தை கண்டடையும் வழிகளை தள்ளிவிடுகின்றார்கள். ஞானமுள்ளவர்கள் கடிந்து கொண்டு அறிவு புகட்டுகிறவர்களை நேசிக்கின்றார்கள். ஆனால் துன்மார்க்கரை கடிந்து கொண்டால் அவர்கள் கடிந்து கொள்கிறவர்களை கறைப்படுத்துவார்கள். பரியசக்காரர், ஞான உபதேசத்தை வெறுத்து, வாய்க்கு வாய் ஏதாவது ஒரு மறுமொழியைக் கூறி, அதிலிருந்து தப்பித்துக் கொண்டு, பின்பு தாங்கள் எப்படி தந்திரமாக தப்பித்துக் கொண்டோம் என்று பெருமை பாராட்டுகின்றார்கள். இன்று நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, ஞான உபதேசத்தினால் நான் கடிந்து கொள்ளப்படும் போது, தப்பித்துக் கொள்ளும் போக்கை பாராமல், என்னைத் தாழ்த்தி அதை ஏற்றுக் கொள்ளும் மனதைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# ஞானத்தில் குறைவுள்ளவன் தேவனிடத்தில் கேட்கக்கடவன்

**நீதிமொழிகள் 8:11**
**முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது. இச்சிக்கப்பட த்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல.**

உங்களோடு ஆலயத்திற்கு சென்றால் மதுபான வெறி கொள்ள முடி -யாது, எந்த களியாட்டங்களுக்கும் இடமில்லை, நண்பர்களோடு இரவுநேர கேளிக்கைவிடுதிகளுக்கு சென்று ஆடிப்பாட முடியாது என ஒரு மனிதன் கூறிக் கொண்டான். இப்படியாகத்தான் மதியீனம் சந்தி வெளிகளில் இருந்து மனிதர்களுக்கு பதிவிருக்கின்றது. மதீயின மானது எங்கள் உணர்வுகளை திருப்திப்படுத்தும் செய்கைகளினாலே எங்களை கவர்ந்து கொள்கின்றது. மனதிலே தோன்றும் பாவ இச்சை களை நிறைவேற்ற அழைப்பு விடுகின்றது. இது மனிதர்களுடைய வாழ்விலே தற்காலிக இன்பத்தை கொடுக்கின்றது. ஆனால் ஈற்றிலே அதை நாடித் தேடுகின்றவர்களின் வாழ்வை முற்றாக கெடுத்து விடுகி ன்றது. ஞானமானது முதலாவதாக மனிதர்களுடைய மனதை கவர்ந்து கொள்ள அழைப்பு விடுகின்றது. ஆரம்பத்திலே இந்த அழைப்பானது பாவ இச்சைகளுக்கும் உணர்வுகளுக்கும் கவர்ச்சியானதாக தோன் றாது. ஆனால் ஞானத்தின் கூப்பிடுதலுக்கு செவி கொடுக்கின்றவனின் மனக் கண்கள் பிரகாசமடைவதால், பாவ இச்சைகள் எவ்வளவு மதியீனமானவைகள் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்கின்றான். இரையை தேடி பதிவிருக்கும் துஷ்ட மிருகங்களைத் தெளிவான கண் களால் பட்டப் பகலில் காண்பதைப் போல, மதியீனமானது இன்ன தென்று அறிந்து கொள்கின்றார்கள். தேவ பயமே ஞானத்தின் ஆரம்-பம் என்று நேற்றைய தியானத்தில் வாசித்தோம். தீமையை வெறுப்-பதே தேவ பயம். பெருமையையும், அகந்தையையும், தீய வழியை யும், புரட்டுவாயையும் உங்களை விட்டு அகற்றிவிடுங்கள். இவைகள் உங்கள் பாவ இச்சைகளை நிறைவேற்றும் வேராக இருக்கும். தேவ பயம் உள்ளவர்கள் இவைகளை வெறுக்கின்றவர்கள். இவர்கள் ஞான த்தை தங்கள் வாழ்க்கையில் வரவழைத்துக் கொள்வதால், வெள்ளி, பசும்பொன், மற்றும் விலையுயர்ந்த முத்துக்களைப் பார்க்கிலும், விலையேறபெற்ற பொக்கிஷத்தை தங்கள் வாழ்க்கையில் சம்பாதி த்துக் கொள்கின்றார்கள்.

**ஜெபம்:** அன்புள்ள தேவனே, என் மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் உணர்வுகளை வெற்றி கொள்ளும்படி உணர்வுள்ள ஞானமுள்ள பிரசாகமான மனக் கண்களைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# விலக்கப்பட்ட கனி

**எபிரெயர் 12:1**

**பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.**

ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்த மனிதன், கிராம எல்லை அருகே வேலைக்காக தினமும் சென்று வருவான். வேலைக்கு சென்று வருவதற்காக, குறுகிய நேரத்திற்குள் செல்லக் கூடிய ஒரு பாதையை தெரிந்து கொண்டு, காலை மாலை அவ்வழியாக கடந்து செல்வான். அந்த கிராமத்திலுள்ள மூப்பர்களில் ஒருவர், தம்பி அந்த பாதைக்கு சற்று அப்பால் விஷம் நிறைந்த பாம்புப் புற்றுகள் உண்டு எனவே நீ அந்த வழியை பாவிப்பதை தவிர்த்துக் கொள் என்று அறிவுரை கூறினார். ஆனாலும் அந்த குறுகிய பாதை இவனுக்கு பழக்கப்பட்டுப் போனதால் அவன் அதை பொருட்படுத்தவில்லை. ஒரு நாள் மாலை மங்கிய நேரத்தில் அவ்வழியாய் வந்து கொண்டிருக்கும் போது, பாம்பு ஒன்று இவனைக் கடித்து விட்டது. அது மரணத்திற்கேதுவாக கடுமையானதாக இருந்தது. பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையிலே, விலக்கப்பட வேண்டிய கனிகள் உண்டு. அதாவது, உங்களை தேவனைவிட்டு பிரிக்கக்கூடிய, அல்லது உங்கள் பரிசுத்தமான வாழ்க்கையை இடறல் படுத்தக்கூடிய இடங்கள், பொருட்கள், மனிதர்கள் (ஆண்கள், பெண்கள்), காட்சிகள், சத்தங்கள், பேச்சுக்கள் இருக்கலாம். அவைகளை முற்றாக உங்களை விட்டு தூரப்படுத்துங்கள். எங்கெங்கே காவல் போடப்பட வேண்டுமோ, காவலை போட்டுவிடுங்கள். உங்களை பாவம் செய்யத் தூண்டுகிற காரணிகளை அலட்சியமாக விட்டு வைக்காதிருங்கள். அந்த காரணிகள் உங்களில் பாவம் செய்யும் ஆசையை படிப்படியாக அதிகரித்து, பின்பு அந்த பாவத்தை தீவிரமாக உங்களில் நடப்பிக்கும். பின்பு நீங்கள் கண்ணியில் சிக்கிய பறவை போல ஆகிவிடுவீர்கள். உங்கள் சுத்த மனசாட்சி பாவ காரணிகளை முதல் தடவையாக உணர்த்தும் போது, உடனடியாக விலக்கப்பட வேண்டியவைகளை தீவிரமாக உங்களை விட்டு அப்பாற் படுத்தி விடுங்கள்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, எந்த காரணத்திற்காகவும், உம்மைவிட்டு தூரப்படுத்தும் காரணிகளை என் வாழ்வில் வைத்திருக்காதபடி எனக்கு உதவி செய்யும். இரட்சகராகிய இயேசுவின் வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# என் தகைமை என்ன?

**யாத்திராகமம் 31:5**
**மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்.**

தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான் என்று வேதம் கூறுகின்றது. இங்கு மதிகேடன் என்று சொல்லும் போது, இந்த உலக கல்வியை முறைப்பபடி கற்காதவன் என்பது பொருள் அல்ல. இந்த உலகத்திற்குரிய கல்வியில் தேர்ச்சியடைந்து, உலக ஞானம் என்று கூறப்படுகின்ற காரியங்களில் தங்களை தக்கவைத்தவர்கள், தங்களுக்குள் பெருமை அடைந்து, மெய் ஞானமாகிய தேவ ஞானத்தை மறுதலித்து தங்களையே தாங்கள் மதியீனர் ஆக்கிக் கொள்கின்றார்கள். மோசே என்னும் மனிதன் சவுந்தரியமுள்ளவனும், எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். ஒரு இளவரசன் எப்படி இருக்க வேண்டும் என்பதில் இவன் பயிற்றுவிக்கப்பட்டவன். ஆனால் தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற உலக கலைகள் நிறைந்தவர்களை தேடவில்லை. மோசே எகிப்தை விட்டோடி, மீதியானிலே 40 வருடங்கள் ஆடுமாடுகளை மேய்க்க வேண்டியதாயிற்று. இப்போது இவனுக்கு 80 வயதானபோது தேவன் தாமே இவனை தலைவனாகவும் மீட்பனாகவும் உயர்த்தினார். அப்போது இவனிடம் இருந்த கலை (skill) தன்னைத் தேவ சமுகத்தில் தாழ்த்தி தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, தேவன் எதை சொல்கின்றாரோ, அதை அப்படியே செய்வதாகும். இன்று கல்வி கற்க வாய்ப்புண்டானால் கற்றுக் கொள்ளுங்கள், ஆனால் அவைகள் தான் எங்களை தேவ சேவை செய்ய தகுதிப்படுத்தும் தகமைகள் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள். இதே பிரகாரமாய் எங்களுக்கு முன் சென்றிருக்கிற பரிசுத்தவான்களும், இந்த உலக கல்வியை கற்றிருந்தாலும் கற்காவிட்டாலும், தேவ ஞானமுள்ளவர்களாக இருந்தபடியால் தேவ சத்தத்திற்கு கீழ்படிகின்றவர்களாகவே இருந்து தங்கள் பூவுலக பணியை வெற்றியோடு நிறைவேற்றினார்கள்.

**ஜெபம்:** அன்பும் இரக்கமுமுள்ள பிதாவே, உம்முடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, நீர் சொல்வதை செய்ய ஆயத்தமாயிருக்கும் பணிவுள்ள இருதயத்தைத் எனக்கு தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# இயேசுவினிடத்திற்கு திரும்புங்கள்

**எசேக்கியேல் 18:31**

**நீங்கள் துரோகம்பண்ணின உங்களுடைய எல்லாத் துரோகங்களையும் உங்கள்மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள்.**

இன்று பலர் செல்வங்களை சேர்ப்பதற்காக பல வழிகளை நாடுகின்றார்கள். ஐசுவரியத்தின் மயக்கம் இவர்கள் இருதயங்களை ஆட்கொள்ளுவதால், இவர்கள் இருதயம் பலன் கொடுக்க முடியாதபடிக்கு உணர்வற்றுப் போய்விடுகின்றது. இவர்களுக்கு கிடைக்கும் பலன் இந்த உலக மாயையே. இவர்களில் சிலர் அநியாயமான, துன்மார்க்கமான நெறிமுறை தவறிய வழிகளிலும் சென்று தங்களுக்கு திரவியங்களை சேர்த்துக் கொள்கின்றார்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் சமாதானம் அடைய கூடிய வழியை அடைத்துப் போடுகின்றார்கள். அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது. தேவன் துன்மார்க்கருடைய பொருளையோ அகற்றிவிடுகிறார் என்று பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். தன் நிலைமையை மறைக்காமல், குள்ளன் என்று மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்பதை பொருட்படுத்தாமல், மரத்தின் மேல் ஏறினான். இயேசு கிட்டே வந்து அவனை அழைத்தார். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார். துன்மார்க்க திரவியத்தை வைத்துக் கொண்டு, மனிதன் ஒரு போதும் சமாதானமாக வாழ முடியாது. ஐசுவரியம் மட்டுமல்ல, எந்த துன்மார்க்க கிரியையும் சமாதானத்தைக் கெடுக்கும். எனவே இயேசு தரும் சமாதானம் உள்ளத்தில் தங்க வேண்டுமாயின், அநியாயமான வழிகளை விட்டு இயேசுவினிடத்திற்கு திரும்புங்கள்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, நெறி முறை தவறிய வழிகளில் சென்று, நீர் தரும் சமாதானத்தை கெடுத்துப் போடாமல், நீதியின் வழியில் நடக்க கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# தேவன் பெலன் தருவார்

**மத்தேயு 7:7**

**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

இந்த வருடம் ஆரம்பித்து 9 மாதங்களை கடந்து வந்திருக்கின்றோம். பல ஏற்ற தாழ்வுகள் வாழ்க்கையில் வந்திருக்கலாம், ஆனால் எங்களை அழைத்த தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறதவரும், உண்மையுள்ளவருமாகவே இருக்கின்றார். இன்ன இன்ன காரியங்களை தனிப்பட்ட வாழ்க்கையிலே செய்ய வேண்டும், மற்றும் சில காரியங்களை விட்டுவிட வேண்டும் என வருட ஆரம்பத்திலே பல முடிவுகளை நீங்கள் எடுத்திருக்கலாம். அவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். என்னுடைய உள்ளான மனிதனிலே நன்மைக்கேதுவான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றதா? எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல மாறும்படியாய் என்னுடைய சுபாவங்கள் மாற்றம் அடைந்திருக்கின்றதா? பிரியமானவர்களே, இந்த வருடம் இன்னும் முடியவில்லை. எனவே எங்கள் வாழ்க்கையில் நாங்கள் எடுத்த முடிவின்படி, தேவனை கிட்டிச் சேர, அவரை அறிகிற அறிவிலே வளரும்படி இன்னும் நிறைவேற்ற முடியாமல் இருக்கும் காரியங்களை ஆராய்ந்து பார்த்து தேவனிடத்திற்கு திரும்புவோம். உங்களில் விடமுடியாமல் இருக்கும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை குறித்து அசட்டையாய் இருந்து விடாதிருங்கள். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று இயேசு கூறினார்.. உங்களை அடிமைத்தனதிற்குள் செல்ல உந்தும் காரணிகளை களைந்து விசுவாசத்தோடு கேளுங்கள். தேவன் அவற்றை வாய்க்கச் செய்வார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள பரலோக தகப்பனே, நான் என் வாழ்க்கையில் எடுத்த நல்ல தீர்மானங்களை நடப்பித்து முடிக்க எனக்கு பெலன் தருவீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# சமாதானத்தின் பங்காளிகள்

**1 கொரிந்தியர் 14:33**
**தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.**

ஒரு பெரிய தொழிற்சாலையின் தொழில் அதிபர், தன்னுடைய காரியாலயத்திலே "நீங்கள் பிரச்சனைகளுக்கு பங்காளியா அல்லது நீங்கள் அந்த பிரச்சனைகளின் தீர்வுக்கு பங்காளிகளாக இங்கு வந்திருக்கின்றீர்களா" என்று பொருட்படும் சுவரொட்டி ஒன்றை தன் சுவரிலே போட்டிருந்தார். இந்த அதிபர் தன் தொழிற்சாலையில் பிரச்சனைகள் இல்லை என்று கற்பனையான உலகத்திலே வாழாமல், இங்கு பிரச்சனைகள் உண்டு அல்லது பிரச்சனைகள் வரும் என்று ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அந்த பிரச்சனை உந்தும் காரணிகளாக அல்ல, அங்கு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்படியாகவே நாங்கள் இங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றோம் என்னும் கருத்தை ஆணித்தரமாக அங்கு வேலை பார்க்கும் யாவருக்கும் கூறிவந்தார். பிரியமானவர்களே, தாயின் கருவில் உருவாக முன்னே எங்களை பெயர் சொல்லி அழைத்த தேவன், இந்த பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கும் படி கூறியிருக்கின்றார். அதாவது வறியவர்களுக்கும், திக்கற்றவர்களும் உதவி செய்வது மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தில், எங்கள் சமுதாயத்தில், எங்கள் ஆலயத்தில், எங்கள் கல்வி நிலையங்களில், எங்கள் வேலைத் தளங்களில், மற்றும் வெளி இடங்களில், "**தேவ வார்த்தையின்படி**" நாங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளாகவே இருக்க வேண்டும். பிரச்சனைகளையும், குற்றங்களையும், பாவங்களையும் வர்ணிப்பதில் எங்கள் நேரத்தைச் செலவிடாமல், அவற்றை உண்டு பண்ணும் காரணிகளாக இருக்காமல், அவற்றை தீர்த்து வைக்க, சமாதானம் செய்ய, ஒப்புரவாக்க பிரயாசப்பட வேண்டும். நான் இன்று எந்தப் பக்கம் நிற்கின்றேன்? பிரச்சனைகளை உண்டுபண்ணும் பக்கத்திலா? அல்லது பிரச்சனைகளை தீர்த்துவைக்க வேண்டும் என பிரயாசப்படும் பக்கத்திலா?

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, பிரச்சனைகளையும், குழப்பங்களையும் தீர்த்துவைக்க பிரயாசப்படும், மகனாக மகளாக நான் வாழ எனக்கு கிருபை செய்வீராக.இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# தேவ கிருபையும் இரக்கங்களும்

**புலம்பல் 3:22-23**
**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள் உமது உண்மை பெரிதாயிருக்கிறது.**

எங்களுடைய வாழ்விலே ஒவ்வொரு நாளும் பலவிதமான சூழ்நிலைகளை எதிர் நோக்குகின்றோம். இவைகள் எங்களுக்கு சாதகமானதாகவோ அல்லது பாதகமானதாகவோ இருக்கலாம் ஆனால் அந்த சூழ்நிலைகளை திவ்விய சுபாவங்களை கொண்டு வரும் சந்தர்ப்பங்களாக மாற்றுவது எங்களுடைய தீர்மானமாக இருக்கின்றது. கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கங்களுக்கும் முடிவில்லை, ஒவ்வொரு நாளும் அவை புதியதாக இருக்கின்றது. இந்த சிலாக்கியத்தை தேவன் எங்களுக்கு தருவதற்கு காரணம் என்ன? எங்கள் கண் போன வழியிலே வாழ்வதற்காகவா? உலக ஆசைகள் யாவையும் நிறைவேற்றுவதற்காகவா? இல்லை! எங்கள் யாவரையும் கிறிஸ்துவைப் போல மாறும்படியாய் விரும்புகின்றார். கிழமையில், ஞாயிறு ஆலயத்திற்கு செல்லும் ஒரு சில மணித்தி யாலங்கள் மட்டும் எங்களை தேவ பிள்-ளைகள் போல காண்பிப்பது போதாது, நாள்தோறும் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற 24 மணி நேரமும், எங்கள் வாழ்க்கையை பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவில் எந்த தீமையும் இருக்கவில்லை. ஒரு பாவமும் அவரிடம் இல்லை. ஆனாலும் அநேகர் அந்த காலத்திலும், இந்தக் காலத்திலும் அவருக்கு எதிராக துணிகரமான பேச்சுக்களை பேசுவதிலும், செய்கைகளிலும் ஈடுபடுகின்றார்கள். ஆனாலும், அவர்கள் அறியாமையிலிருந்து விடுதலை அடையும்படியாய் தேவன் தாமே பொறுமையுள்ளவராக, அவர்களுக்கும் கிருபை செய்கின்றார். அதே போல எங்கள் வாழ்விலும், நாங்கள் நன்மை செய்கின்ற போதும், எங்களுக்கு எதிராக செயற்படுவோர் உண்டு, அந்த சந்தர்ப்பங்களில் தேவன் எங்களுக்கு தரும் புதிய கிருபையையும் அவருடைய முடிவில்லாத இரங்கங்களையும் வெளிக்காட்டுவோம். நாங்கள் அழிந்து போகாமல் இருப்பது தேவனுடைய சுத்த கிருபை.

**ஜெபம்:** என் நேச தகப்பனே, எந்த நேரமும் உம்முடைய திவ்விய சுபாவங்கள் என்னில் வெளிப்படும்படி என்னை உம்முடைய வழியில் நடத்துவீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# சுமுத்திரையான நிறைக்கல்லு

**மத்தேயு 7:2**
**நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.**

குடும்பத்தில் உள்ள மற்றய உறுப்பினரின் குறைகள், அயலிலே வசிக்கின்ற குடும்பங்களின் குறைகள், சமுதாயத்திலே வாழும் மக்களின் குறைகள், நாட்டை ஆளும் அதிகாரிகளின் குறைகள், தேவ ஆலயத்திலுள்ள மற்றவர்களின் குறைகள், தேவ ஊழியத்தை நடப் பிக்கும் ஊழியர்களின் குறைகள் போன்றவைகளை கண்டு கொள் வது அவரவருக்கு சுலபமாக இருக்கும். ஆனால் தங்கள் குறைக ளையும், குடும்ப விவகாரங்களையும் மறைத்து வைப்பதில் மனிதர்கள் முந்திக் கொள்வார்கள். "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலி ருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" என்று இயேசு கூறியிருக்கி ன்றார். கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது என்று நீதிமொழி களின் புத்தகத்திலே வாசிக்கின்றோம். கள்ளத் தராசு என்று கூறும் போது, பொருட்களை விற்பனை செய்கின்றவர்களை மாத்திரம் நினை த்துக் கொள்வோம். ஆனால் தராசு என்னும் அளவு கோலை நாங்கள் பல இடங்களிலே எங்கள் வாழ்க்கையில் கையாளுகின்றோம். நான், அல்லது என்னுடைய குடும்பத்தார் ஒரு குற்றத்தை செய்யும் போது என்ன செய்கின்றேன்? அதே குற்றத்தை இன்னுமொருவர் அல்லது அவருடைய குடும்பத்தார் செய்யும் போது என்ன செய்கின்றேன்? நீதிமன்றத்திலே உள்ள நீதிபதி ஒரு வழக்கை பாரபட்சத்துடன் தீர்த்து வைத்தால், அதை யாரும் விரும்ப மாட்டார்கள். ஏனெனில் அங்கு பாவிக்கப்பட்ட நீதியின் தராசு சரியான முறையில் கையாளப்படவ ல்லை. நாங்களும் பாரபட்சத்துடன் விடயங்களை கையாளக்கூடாது. சுமுத்திரையான நிறைகல்லே கர்த்தருக்கு பிரியம். எனவே நாங்கள் மற்றவர்களை குறித்து குறை கூறுதலை விட்டு விட வேண்டும். வீட்டிலோ வெளியிலோ, நீதி செய்யப்பட வேண்டிய ஆசனத்தில் நீங் கள் அமர்ந்திருந்தால், தேவனுக்கு பயந்து தேவ நீதியை நிறைவே ற்றுங்கள்.

**ஜெபம்:** நீதியின் தேவனே, உம்முடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்ற நாமும், தேவ நீதியை எப்போதும் நிறைவேற்றுகிறவர்களாக இருக்க எங்களை வழிநடத்தும். இரட்சகராகிய இயேசுவழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்!

# வழிகளை ஆராய்ந்து பாருங்கள்

**சங்கீதம் 139:24**
**வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.**

வீட்டில் நடக்க இருக்கும் வைபவத்திற்கு, அநேக விருந்தினர் வர இருப்பதால், குடும்பத்தினர் யாவரும் வீட்டின் உள்ளும், புறமும், சகல மூலைகளையும் கூட்டிச் சுத்தம் செய்தார்கள். வியக்கத்தக்க விதமாக அநேக தேவையற்ற, அநாவசியமான பொருட்களும் தங்கள் வீட்டிற்குள் அநேக வருடங்களாக இருப்பதை கண்டு கொண்டார்கள். இதனால் பணம் விரயமானதுடன், வீடு துப்பரவற்றுப் போவதை அறிந்து கொண்டார்கள். இவை ஒரு நாளில் நடை பெறவில்லை. வீட்டிற்குள் அவை யாவற்றையும் சேர்க்க வேண்டும் என்ற எண்ண த்துடன் செயற்படுத்தப்படவில்லை. இவை பல வருடங்களாக சிறிது சிறிதாக சேர்க்கப்பட்டிருந்தது. இவ்வண்ணமாக, இப்பூமியில் எங்கள் வாழ்க்கையும் இருக்கின்றது. வாழ்க்கை நல்ல எண்ணத்துடன் ஆரம்பிக்கின்றது, பின்பு படிப்படியாக பல விடயங்கள் எங்கள் வாழ்க் கையில் நுழைந்து விடுகின்றது. வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்கும் உறவுகளும் நட்புகளும் உட்புகுந்து விடுகின்றது. இதனால் பாவ வழிக்கு இட்டுச் செல்லும் மாம்ச கிரியைகளின் காரணிகள் இருதய த்தில் வளர ஆரம்பிக்கின்றது. இவை காலப்போக்கில், எங்களை அறி யாமலே விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகா ராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறா மைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்ற விளைவு-களை உண்டாக்கிவிடுகின்றது. இப்படியான கிரியைகள் எங்கள் வாழ்வில் வெளியரங்கமாக நடாத்தப்படாவிட்டாலும், இவை படிப்ப டியாக எங்களை அறியாமல் இருதயத்தில் பதிந்து விடுகின்றது. இவை எங்களை தேவனைவிட்டு தூரம் போகச் செய்து விடுகின்றது. எனவே கால த்திற்கு காலம் எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எங்கள் இருதயத்தில் என்ன இருக்கின்றது என ஆராய்ந்து அறிந்து, தேவனிடத்திற்கு திரும்ப வேண்டும்.

**ஜெபம்:** பரலோக தகப்பனே, வேதனை உண்டாக்கும் வழிகள் என் வாழ்வில் உண்டோ என்று ஆராய்ந்து உம்மிடம் கிட்டிச் சேர எனக்கு உதவி செய்யும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# சீர்பொருந்தியிருங்கள்!

**1 கொரிந்தியர் 1:10**

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரேகாரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும்வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

மனிதன் தன் கீழ்ப்படியாமையினால் பிசாசின் சத்தத்திற்கு தன் வாழ்க்கையில் இடங் கொடுத்ததால், தேவனைவிட்டு தன்னை தூரப்படுத்திக் கொண்டான். இப்படியாக ஒரே மனிதனால் பாவம் உலகத்தில் வந்தது. பரலோக மேன்மையான சாயலை இழந்து நித்திய நரகத்திற்கு தன்னையே தான் ஆளாக்கிக் கொண்டான். தேவன் மனிதர் மேல் வைத்த அன்பினால், தன்னுடைய ஒரே பேறான குமாரானாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பி மனித குலம் மீட்கப்பட்டு பரலோகம் செல்லும் வழியை உண்டு பண்ணினார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசு மூலமாய் ஒப்புரவாக்கினார். பிரிவினை என்பது தேவனிடத்தில் இல்லை! எனவே தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுபவர்கள் மத்தியில் பிரிவினையை உண்டாக்கும் செயல்கள் இருக்க முடியாது. ஒருவன் தானாய் தன்னை பிரித்துக் கொள்ள தீர்மானித்தால், அது அவனுடைய முடிவு. ஆனால் நாங்கள் எந்த ஒரு பிரிவினைக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்காளிகளாக இருக்க முடியாது. இன்று பலர், ஐக்கியம் என்ற போர்வையில் ஒருவரோடு ஒருவர் நட்பு வைத்து, பின் மற்றவர்களை பற்றி பேசி, பிரிவினையின் ஆவியை தங்களுக்குள்ளே வரவேற்கின்றார்கள். எங்களுடைய செயல்களினால், எந்த குடும்பங்களுக்குள்ளும் பிரிவினைகள் வரக்கூடாது. எங்களுடைய செயல்களினாலே சபையிலே பிரிவினைகள் வர அனுமதிக்கக் கூடாது. ஒரு குடும்பம் இரு குழுக்களாக பிரிந்திருந்து ஒன்றுக்கெதிராக ஒன்று செயற்பட்டால் அக்குடும்ப அங்கத்தினவர்களுக்குள் சமாதானம் தங்காது! சபைக்குள் குழுக்களாக பிரிந்து முறுமுறுப்புடன் செயற்பட்டால் அங்கே சமாதானம் இருக்காது. இயேசு கிறிஸ்துவைப் போல நாங்களும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்ய வேண்டும். எங்கெல்லாம் சமாதானத்தை உண்டு பண்ண முடியுமோ, அங்கெல்லாம் உறவுகள், குடும்பங்கள் சீர்பொருந்தும்படி செயற்பட வேண்டும்.

**ஜெபம்:** அன்புள்ள எங்கள் பிதாவே, பிரிவினைகளை விட்டுவிட்டு மனிதர்கள் ஒப்புரவாகும்படி நான் பிரயாசப்பட என்னை வழிநடத்தும். இரட்சகராகிய இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# மனத்தாழ்மையுடனான பணி!

**1 பேதுரு 5:2**
**சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்.**

பாடசாலை நாட்களில், சில மாணவர்கள், தங்களிலும் வித்தியாசமாக இருப்பவர்களை தாழ்வுபடுத்தி பேசுவதை கண்டிருக்கின்றோம். இப்ப டியான செய்கைகள் தொடர்ச்சியாக நடைபெறும் இடங்களில், பலத ரப்பட்ட விபரீதங்கள் ஏற்படுகின்றது. சில நாடுகளில் மாணவர்கள் இத -னால் தற்கொலை கூட செய்து விடுகின்றார்கள். பாடசாலை நாட்க ளில், மாணவர்கள் சிறியவர்கள் ஆதலால், புத்தியீனமான காரியங் களை, அறியாமல் செய்கின்றார்கள் என கூறலாம். ஆனால் எங்கள் சொந்தங்கள் மத்தியிலும், தொழில் செய்யும் இடத்திலும், சபை ஐக்கி யங்களிலும் பல விதமான சூழ்நிலைகளிலும், வேறுபட்ட வயதெல் லையுடையவர்களும், வேறுபட்ட அதிகாரம் உடையவர்களும் இருக்கி ன்றார்கள். எனவே சிறுமைபட்டவர்களை குறித்த விஷயத்தில் யாவரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வயதினாலோ, அல்லது உறவினாலோ, அல்லது கொடுக்கப்பட்ட பதவியினாலோ, அல்லது கலாச்சார மரபினாலோ, மேல் நிலையிலுள்ளவர்கள் தாங்கள் நினை த்தது நிறைவேற்றும் படியாய் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து, மற்றவர்களின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துவதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உதாரணமாக குடும்பத் தின் தந்தை ஸ்தானத்திலுள்ளவர், தன் இஷ்டப்படி மனைவி பிள்ளை -களை, தாறுமாறாக கடிந்து கொண்டு, தன் எண்ணம் நிறைவேற்ற அவர்களை அடிக்கின்றவனாக இருக்க முடியாது. தொழில் செய்யும் இடத்தில் எங்களுக்கு கீழ் உள்ளவர்களை கடினமாக நடத்தக்கூடாது. சபை ஐக்கியத்திலும், அன்புடனும் சகல கனத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அதிகார துஷ்பிரயோகங்கள், மற்றவர்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுடன் சேர்ப்பதற்கு பதிலாக, கிறிஸ்துவை விட்டு அவர்களை தூரப்படுத்தி விடுகின்றது.

**ஜெபம்:** அன்புள்ள எங்கள் தேவனே, நான் இறுமாப்புடன் எனக்கு தந்த பொறுப்புகளை நிறைவேற்றாமல், அன்புடன், தாழ்மையுடன், கனத்துடன் அவற்றை நிறைவேற்ற ஞானமுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்!

# நீதிமான்களின் வாழ்க்கை

**நீதிமொழிகள் 12:28**
**நீதியின் பாதையில் ஜீவன் உண்டு அந்தப் பாதையில் மரணம் இல்லை.**

யுத்த நாட்களிலே ஒரு ஊரிலே வசித்து வந்த குடும்பத்தினரோடு சேர்ந்து ஜெபிக்கும்படி அவர்கள் வீட்டிற்கு ஒரு ஊழியர் வருகை தந்திருந்தார். ஜெபம் நடந்து கொண்டிருக்கையில், ஆங்காங்கே குண்டு வெடிப்புகளின் சத்தம் கேட்டுக் கொண்டிருப்தை அவதானித்த ஊழியர், அந்த குடும்பத்தினர் எந்த சலனமும் இன்றி ஜெபித்துக் கொண்டிருப்பதை கண்டு ஆச்சரியப்பட்டார். ஜெபம் முடிந்த பின், "இவ்வளவு தையரியத்தோடு நீங்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருப்பது, மெச்சத்தக்க செயல்" என்று அந்த ஊழியர் கூறினார். அந்த சச்சரவுகள் மத்தியிலும் அக் குடும்பத்தினர், நன்றாக உறங்கினார்கள். அந்த நாட்களில் பணமோ, செல்வாக்கோ, அந்தஸ்தோ எவருக்கும் உதவி செய்ய முடியவில்லை. தேவனாகிய கர்த்தர் தாமே அந்த தைரியத்தையும் இளைப்பாறுதலையும் அந்த குடும்பத்திற்கு கொடுத்திருந்தார். பிரியமானவர்களே, துன்மார்க்கமாக வாழ்பவர்கள், சுகபோகமான வாழ்க்கையை நாடித் தேடுகின்றவர்கள் இந்த பூமியிலே நிறைவான வாழ்வை அனுபவிப்பதில்லை. ஏனெனில் இவர்கள் மனம் எதிலும் திருப்தியடைவதில்லை. பாவமன்னிப்பின் நிச்சயம் இவர்கள் வாழ்வில் இல்லை. இவர்கள் இந்த உலகிலே வாழும் நாட்களெல்லாம் மரண பயத்தோடே வாழ்கின்றார்கள். இப்பூமியிலே, தம்முடைய பிள்ளைகளாகிய நீதிமான்களுக்கு, எந்த சூழ்நிலையிலும், தேவன் ஆறுதலை கொடுக்கின்றார். ஆறுதல் வரும் என்று நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், உபத்திரவமான நாட்களிலும், முறுமுறுப்பின்றி தங்கள் வாழ்க்கையை, அமைதலோடு ஜீவனம் பண்ணுகின்றார்கள். நீதிமான்கள் வாழ்ந்தாலும் தேவனுடைய பிள்ளைகளாகவே வாழ்கின்றார்கள், அவர்கள் இப்பூமியை விட்டு கடந்து செல்லும் போதும், தேவனுடைய பிள்ளைகளாகவே கடந்து செல்கின்றார்கள். அக்கரையிலே அவர்களுக்கு நித்திய இளைப்பாறுதல் இருப்பதால், நித்திய மரணத்தைக் குறித்த பயம் நீதிமான்களை மேற்கொள்ளுவதில்லை. எனவே தேவனோடு ஒவ்வொரு நாளும் வாழும் மேன்மையை உணர்ந்தவர்களாக பொறுமையோடே எங்கள் வாழ்க்கையை தொடருவோம்.

**ஜெபம்:** பரலோக தேவனே, இந்த உலகிலே வாழும் நாட்களெல்லாம், உம்மோடு கூட வாழும் மேன்மையை உணரும் உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# அழைப்பின் மேன்மை

**ரோமர் 8:29**
**தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்தி ருக்கிறார்.**

இஸரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் என்பவன், சவுந்தரியமுள்ள வனாக இருந்தான். இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந் தரியவான் இல்லை. எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழா யிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். இது இவனுடைய வெளி தோற்றம். ஆனால் இந்த ராஜா, தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்க முடியாதிருந்தான். அவன் கீழ்ப்படியாமையை அவனுக்கு உணர்த்தப்பட்டபோது, மனந்திரும்ப முடியாத மதீயீனமான இருதயம் உடையவனாக இருந்தான். ஒரு சந்தர்ப்பத்திலே தேவனுடைய தீர்க்க தரிசியாகிய சாமுவேல், சவுல் ராஜாவை நோக்கி “புத்தியீனமாய்ச் செய்தீர் உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளை யைக் கைக்கொள்ளாமற்போனீர்” என்று கூறினார். இது சவுல் ராஜா வின் உள்ளான தோற்றம். இதே போல “மதிகேடாய் நடக்கிற அழகு ள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்” என பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். பிரியமானவர்களே, கிழமைதோறும் கையிலே வேதம் ஏந்தி, நாங்கள் ஆலயம் செல்வது ஒரு அழகான காட்சி! இது எங்களின் வெளித் தோற்றம். ஆனால் எங்கள் உள்ளம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்காவிட்டால், தேவனுடைய மகத்துவமான அழைப்பின் மேன்மையை மறுதலிக்கின்ற வர்களாக வாழ்கின்றவர்களாயிருப்போம். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலை அடைந்து மறுரூபமாக்கும்படி, தேவன் எங்கள் பாவங்களை கழுவி, எங்கள் இருதயத்தை சுத்தப்படுத்தினார். அதன் மேன்மையை அற்பமாக எண்ணி, வெளி தோற்றத்தை மட்டும் மருகு படுத்தி வாழுவோமாக இருந்தால் நாங்களும் பரிதபிக்கப்படக் கூடிய மதிகேடர்களுக்கு சமானமாக இருப்போம். அப்படியிருக்கா மல், அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ்வோம்.

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உம்முடைய அழைப்பின் மேன்மையை உணர்ந்து, எங்கள் உள்ளம் கிறிஸ்துவைப் போல மாற உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# தேவ சித்தத்தில் ஆறுதல்

**எபிரெயர் 13:21**

**இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக.**

யோசுவா என்னும் தளபதி எப்படியாக எரிக்கோ பட்டணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற வழிமுறைகளை, தேவன் தாமே அவனுக்கு கொடுத்தார். எரிக்கோவில் உள்ள பொருட்களின் அசுத்தமானவை-களை இச்சிக்க வேண்டாம் என தேவன் கூறியிருந்தார். தேவன் தம்முடைய வாக்கின்படி பலத்த எரிக்கோ கோட்டையின் மதில்களை, துதியினால் தகர்த்தார். இஸ்ரவேலர் எரிகோவை மேற்கொண்டார்கள். ஆனாலும் ஆகான் என்னும் ஒரு மனிதன், எரிக்கோவின் தீட்டான பொருட்களை இச்சித்து, யாரும் அறியாதபடி அதை தன் கூடாரத்தின் கீழ் புதைத்து வைத்திருந்தான். இதனால், அந்த வெற்றி இஸ்ரவேலருக்கு சாபமாக மாறியது. பின்பு, ஆயி என்னும் ஒரு சிறியபட்டணத்தை முற்றுகையிட்டார்கள். எண்ணிக்கையில் மிகவும் குறைவுள்ள ஜனங்களாக இருந்தும், இஸ்ரவேலர், அவர்கள் முன்னால் முறிந்தோடினார்கள். ஏனெனில் தேவனுடைய திட்டங்களை, தேவனுடைய நியமங்களின்படி செய்தால் மாத்திரமே எங்களுக்கு அவைகளால் ஆசீர்வாதமும், விடுதலையும், ஆறுதலும் கிடைக்கும். இன்று மனிதர்களுக்கு பலவிதமான வளங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக இவ்வளங்களில், உலக ஐசுவரியம், இன்னும் பலவிதமான தாலாந்துகள் இதனுள் உள்ளடங்கும். இவைகளை தேவன் குறித்த நியமங்களின்படி பிரயோகம் செய்கின்றவன், மற்றவர்களுக்கும் தனக்கும் பெரிதான ஆசீர்வாதங்களை உண்டுபண்ணிக் கொள்கின்றார்கள். ஒருவன் உலக ஐசுவரியம் உள்ளவனாக இருந்தால், தேவன் எதற்காக அதை கொடுத்தார் என்று அறிந்து, அதற்காக அதை உபயோகிக்கும் போது, அது அவனுக்கு ஆசீர்வாதமாக மாறுகின்றது. எனவே தேவன் தரும் வளங்களை அவரின் சித்தப்படி உபயோகம் செய்வோம்.

**ஜெபம்:** மகத்துவமுள்ள தேவனே, நீர் எனக்கு தந்த வளங்களை, நீர் என்ன நோக்கத்திற்காக எனக்கு தந்தீரோ அந்த நோக்கத்திற்காக நான் அவைகளை பயன்படுத்த என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# குடும்பத்தின் ஆக்கங்கள்!

**கொலோசெயர் 3:15**
**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்.**

குடும்பம் தேவன் தந்த பெரிதான வளங்களில் ஒன்று. பெரிதான ஆக்கங்கள் இங்கே ஆரம்பிக்கின்றது. சில வேளைகளிலே, சீர்குலைந்த குடும்பங்களிலிருந்து தேவனால் அழைக்கப்பட்ட தேவ சாட்சிகளை கேட்டிருக்கின்றோம். அந்த சீர் குலைவுகள் தேவனுடைய அநாதி திட்டம் அல்ல. அப்படியிருந்தும் தேவன் மனிதர்களை உளையான சேற்றிலிருந்து தூக்கி கன்மலையின் மேல் உயர்த்துகின்றவராயிருக்கின்றார். எப்படி ஒரு தொழிற்சாலையில் உயர்தர பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றதோ, தேவ சித்தத்தை நிறைவேற்றும் பிள்ளைகள், குடும்பத்திலே உருவாக்கப்படுகின்றார்கள். இறுமாப்பாய் தன் சுதந்திரத்தை ஆளும் தலைவர்களைப் போல ஒரு மனிதன் தன் மனைவியை ஆளுகை செய்யும் போதும், தன் கணவனுக்கு கீழ்ப்படியாமல் மனைவி தான்தோன்றித் தனமாக வாழும் போதும் அக்குடும்பத்திலே ஐக்கியம் இருக்காது. இப்படியான ஆரம்பம் பிழையான இடத்திற்கு அந்த குடும்பத்தை இட்டுச் செல்லும். புருஷர்களே, உங்கள் மனைவியை அன்பு செய்யுங்கள், மனைவிகளே, உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படியுங்கள், பிள்ளைகளே, பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள், பெற்றோர்களே பிள்ளைகளை பெலனற்றுப் போகும்படி கோபப்படுத்தாதிருங்கள் என வேதம் கூறும் அறிவுரையின்படி வாழும் போது அந்த குடும்பத்திலே ஐக்கியமும் சமாதானமும் பெருகும். தேவ சமுகத்திற்கு குடும்பமாக தினமும் வரவேண்டும், அந்த இடத்திலே ஒவ்வொருவரின் இருதயமும் உணர்வடைந்து நல்ல மாற்றங்களை உண்டுபண்ணும். மற்றய அங்கத்தினரை குறித்ததான எதிர்பார்ப்புக்கள், தேவ வார்த்தைகளுடன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆரோக்கியமான குடும்ப ஐக்கியத்தை உருவாக்கும் பொறுப்பு கணவன் மனைவியிடமே உண்டு. எனவே அந்த ஐக்கியத்தையும் சமாதானத்தையும் உண்டு பண்ணும்படி பிரயாசப் படவேண்டும்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, என் குடும்பம் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாக இருக்க, நான் என்னுடைய பங்கை நிறைவேற்ற . எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# ஆராய்ந்து அறியுங்கள்

**1 தெசலோனிக்கேயர் 5:21-22**

**எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற் றையும் விட்டு விலகுங்கள்.**

எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு என பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அகால நிகழ்வுகள் மனிதர்களின் வாழ்க்கையிலே பின்விளைவுகளை உண்டுபண்ணி விடுகின்றது.இந்த உலகிலே வாழும் நாட்களில், பல சந்தர்ப்பங்கள் எங்கள் வாழ்க்கையிலே வருகின்றது. அவைகள் எங்களை நோக்கி வருவதால் அவற்றை நாங்கள் எங்களுக்கென்று எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவைகளில் சில நன்மைக்கு ஏதுவானதும், இன்னும் பல பாவத்திற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கின்றது. வாழ்க்கையிலே மாற்றங்களை கொண்டு வரும் எல்லா வாய்ப்புக்களையும் வேத வசனங்களோடு அலசி ஆராயும் போது, அவை தக்க சமயத்தில் வந்திருக்கின்றதா? என் வாழ்கைக்கு ஏற்புடையதா என எங்கள் இருதயங்களில் உணர் ந்து கொள்வோம். மனதிலே குழப்பமாக இருந்தால், தேவ ஆலோச னையை நாடுங்கள், ஜெபத்திலே தரித்திருக்கும் போது, தேவன், எங்களை நல் வழியிலே நடத்துவார். மனிதர்களின் வாழ்வில் எடுக்கும் மிகப்பெரிய முடிவுகளின் ஒன்று திருமணம். அப்படியான சூழ்நிலையில், இது சரியான வேளையா? இது தேவனுடைய பூரண சித்தமா என்பதை அறிந்து கொள்ளுங்கள். அது தேவனுடைய திட்டம் என்பதை உறுதி செய்து கொண்டால், அதன் பின் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட எந்த நிபந்தனைகளையும் முன்வைக்காதிருங்கள். தேவன் வெறுக்கும் பெருமைக்குரிய காரியங்களை களைந்துவிடு ங்கள். இப்படியாக எங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகள் யாவும் தேவன் குறித்த நேரத்தில் நடைபெறுமாக இருந்தால், எங்கள் வாழ்க்கையில் சமாதானம் பெருகும். ஆனாலும் பாவங்கள் கவர்ச்சியானதும், மனத் துக்கு இனியதுமான சந்தர்ப்பங்களாக எங்கள் நாளாந்த வாழ்வில் வரும். ஆனால் தேவனோடு வாழ்பவர்களுக்கு, அவற்றை உணர்ந்து கொள்ளும்படியான, பிரகாசமுள்ள மனக் கண்களையும் தேவன் கொடுத்து உதவுகின்றார்.

**ஜெபம்** பரலோக தேவனே, எல்லா சந்தர்ப்பங்களிலும், உம்மு டைய வார்த்தையின்படி நலமானதைப் பற்றிக் கொள்ள வேண் டிய ஞானத்தை எனக்குத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# கருத்தோடு கற்றுக் கொள்ளுங்கள்

**மத்தேயு 13:23**
**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.**

இன்று மனிதர்கள் பல காரணங்களுக்காக பரிசுத்த வேதாகமத்தை படிக்கின்கின்றார்கள். அரசியல், விளையாட்டு, சர்வதேச விவகாரங்களை பத்திரிகை, மற்றும் வானொலி, தொலைக்காட்சி, இன்ரநெற்றில் படித்து; நண்பர்கள், அயலவரோடு அவற்றை பேசுபவர்களைப் போல, வேதத்தை மற்றவர்களுடன் பேசும்படி மட்டும் கற்றுக் கொள்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் வேத வாக்கியங்களை தங் -கள் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதில்லை. வேறு சிலர், தம் குடும்பத்தினரிடம் அல்லது அயலவரின் வாழ்வில் குறை கண்டு பிடிப்பதற்காக வேதத்தை கற்றுக் கொள்கின்றார்கள், இவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்க விருப்பமுடையவர்கள். சிலர் வேதத்திலே ஏதாவது குறையை கண்டுபிடிக்கலாமா என படிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கருத்துக்களை புத்தகங்களாக அச்சிட்டு, திரைப்படங்களை உருவாக்கி, தங்களுக்கு இழிவான ஆதாயம் வரும்படி எத்தனிக்கின்றார்கள். பிரியமானவர்களே, இப்படியாக அநேகர் அநேக காரணங்களுக்காக பரிசுத்த வேதாகமத்தை இன்று கற்கின்றார்கள். இன்று நீங்கள் எந்தக் காரணத்திற்காக வேதத்தை கற்றுக் கொள்கின்றீர்கள்? கற்றுக் கொள்வதற்கு நல்ல காரணங்கள் பல இருந்தாலும், என்னுடைய ஆத்துமாவுக்கு தேவனுடைய வசனம் போஜனமாக இருக்கும்படி கற்றுக் கொள்ள வேண்டும். தேவனின் ஜீவன் தரும் வார்த்தைகள் முதலாவது என்னுடைய வாழ்வில் மாற்றங்களை உண்டு பண்ண வேண்டும். கர்த்தருடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாக இருக்க வேண்டும். "**என்னுடைய**" சுபாவம் இயேசு கிறிஸ்துவைப் போல மாற வேண்டும். அப்படியாக தேவ வசனம் என் வாழ்வில் பலன் கொடுக்காவிட்டால், அதனால் என் ஆத்துமாவிற்கு இலாபம் ஒன்றுமில்லை.

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, வேதத்திலுள்ள வார்த்தைகளை கருத்தோடு கற்று, அவைகள் என் வாழ்வில் பூரணமாய் பலன் கொடுக்கும்படியாய் வாழ உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்!

# பிரியமான வாழ்க்கை

**1 தெசலோனிக்கேயர் 4:1**
**தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண் டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்.**

நான் என்னுடைய சக மாணவர்களைவிட நன்நடத்தை உள்ளவனா கவும், படிப்பில் சிறந்தவனாகவும் இருக்கின்றேன். என்று பிள்ளைகள் கூறும் போது, சில பெற்றோர் அதில் திருப்தியடைகின்றார்கள். இப் -படியான சூழ்நிலைகளில் நாங்களும் மற்றவர்களோடு எங்களை அல் லது எங்கள் பிள்ளைகளை ஒப்பிட்டு திருப்தியடைகின்றோம். எனக்கு மட்டுமல்ல என் சபையிலுள்ள பலருக்கும் இந்த பிரச்சனைகள் உண்டு, எனவே அதைப்பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என சிலர் கூறிக் கொள்வார்கள். ஒரு சமயத்திலே, ஜெபம் செய்யச் சென்ற பரிசேயன், அங்குள்ள பாவியான மனிதனைப் பார்த்து, “**இந்தப் பாவியான மனுஷனைப் போல இராததினாலே**” நான் உம்மை துதிக்கின்றேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். பிரியமானவர்களே, நீங்கள் இந்த உலகத்தில் இருந்து, பரிசுத்த வாழ்க்கை வாழும்படி வேறுபிரிக்கப்பட்டிருக்கலாம். அப்படியானால் நீங்கள் இந்த உலகில் காண்கின்ற மற்றய மனிதர்களின் பாவமான வாழ்க்கையைப் பார்த்து, நான் அப்படிச் செய்வதில்லை ஆதலால் நான் தேவனுக்கு பிரியமாக இருக்கின்றேன் என்று கூற முடியாது. அதாவது இன்னுமொருவருடைய வாழ்க்கையுடன் உங்கள் வாழ்க் கையை ஒப்பிட்டு, அவர்களை நியாயந்தீர்த்து, என்னை மேன்மைப்படு த்துவதால், நான் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்கின்றேன் என்பது பொருள் அல்ல. மற்றவர்களுடன் உங்கள் வாழ்க்கையை ஒப்பிடும் போது, நீங்கள் அவர்களை நியாயந் தீர்க்கின்றவர்களாக இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கை, தேவனுக்கு பிரியமானதாக இருக்கி ன்றதா இல்லையா என்று தேவனுடைய அளவுகோலின்படி அளக்க ப்பட வேண்டும். தேவனை அன்பு செய்கின்றவர்கள், தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிகின்றவர்கள். இவர்களே தேவனுக்கு பிரிய மான வாழ்க்கை வாழ்கின்றவர்கள்.

**ஜெபம்:** அன்புள்ள பரலோக தகப்பனே, என் வாழ்க்கையை மற்றவருடன் ஒப்பிட்டு நான் அதில் திருப்தியடையாமல், உமக்கு பிரியமான வாழ்க்கை வாழ என் மனக் கண்களை திறந்தருளும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

**ரோமர்** 13:11-14, **1 கொரிந்தியர்** 6:12

# அழுத்தும் சுமைகள்

**ரோமர் 8:15**
**அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத் தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்ப ண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.**

நீங்கள் எதிர்நோக்கும் சவால்களில், உங்கள் மனதை அழுத்தும் மிகப்பெரிய பாரம் அல்லது ஓயாமல் உங்களை தொந்தரவு செய்யும் பிரச்சனை என்ன என்று உங்களிடம் கேட்டால், எதை சொல்வீர்கள்? சற்று தரித்திருந்து சிந்தனை செய்யுங்கள்! உங்கள் சமாதானத்தை அல்லது குடும்ப சமாதானத்தை குலைத்துக் கொண்டிருக்கின்ற காரணி என்ன? அதைக் குறித்து நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? அல் லது அவை இருக்கட்டும் என்று பாரா முகமாக விட்டுச் செல்கின்றீர் களா? அப்படியானால், காலப்போக்கில் அவை வளர்ந்து உங்களை முற்றிலும் மேற் கொண்டு விடும். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவை அறியாதவர்கள், தங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு காரிய த்தில் முடிவை தேடி, மனிதர்களால் நியமிக்கப்பட்ட விசேஷித்த ஸ்த லங்களுக்கு செல்கின்றார்கள். அங்கு தங்கள் சரீரங்களை வருத்துகின் றார்கள், கடுமையாக பிரயாசப்படுகின்றார்கள். ஏன்? தங்களை அழுத் தும் பிரச்சனைகளில் இருந்து எப்படியாவது முடிவு காணவேண்டும் என்று இவைகளை செய்கின்றார்கள். ஆனால் மெய்யான ஒரே வழி யாகிய இயேசு கிறிஸ்துவை கண்ட நீங்கள் உங்களை அழுத்தும் பாரங்களை மேற்கொள்ள வாஞ்சையுள்ளவர்க ளாக இருக்கின்றீர் களா? அல்லது நாளை அதை பார்ப்போம் என்று தேவனுடைய கிரு -பையின் நாட்களை அற்பமாக எண்ணுகின்றீர்களா? பிரியமானவ ர்களே, நீங்கள் உங்கள் வாழ்வில் விடுதலையை கண்ட, சிலுவையின் நிழலில் உங்கள் பாரங்களை இறக்கி வையுங்கள். அவை பாவ காரணியாகவோ, பொருளாதார பிரச்சனையாகவோ, உறவுகளுக்கிடை யிலான குழப்பங்களாகவோ அல்லது எப்படிப்பட்ட பிரச்சினையாகவும் இருக்கலாம். சாத்தியமில்லாத காரியங்கள் யாவும் இயேசுவின் நாமத்தில் சாத்தியமாகும். மறுபடியும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடி-மைத்தனத்தின் பிள்ளைகள் அல்ல. அப்பா பிதாவே என்று அழை-க்கும் சுதந்திரத்தை பெற்ற பிள்ளைகள்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, என்னில் அன்பு கூர்ந்து என்னை அழைத்தீர். மறுபடியும் என் பாரங்களை நான் சுமக்காமல், உம் மில் ஆறுதலை காண கண்களைத் திந்நதருளும். இரட்சகரா கிய இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறேன் ஆமேன்!

# நீதிமானின் மனவிருப்பம்

**நீதிமொழிகள் 10:24**
**துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும் நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்.**

நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும். அவன் அநியாய த்தின் திரவியங்களை தன் சிந்தையில் கூட இச்சிப்பது இல்லை. அவன் சோம்பற்கையால் வேலைசெய்வதில்லை. மாறுபாடுள்ள உதடு அவனுக்கு தூரமானது. அவனுடைய வாழ்க்கையிலே அநியாயத்திற்கு இடமில்லை. தேவ சித்தத்திற்கு விரோதமான கிரியைகளை அவன் வெறுக்கின்றான். நாம் “**எல்லாரும்**” பாவஞ்செய்து, தேவமகிமையற்ற வர்களாகி, இலவச மாய் தேவ கிருபையினாலே கிறிஸ்து இயேசுவி லுள்ள மீட்பை க்கொண்டு நீதிமான்களாக்கப்பட்டோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்மு டைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதா னம் பெற்றிருக்கிறோம் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின் றோம். நாம் நீதிமான்களாக வாழும் போது, நம்முடைய சுத்த மனசா ட்சி நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காது. அப்போது தேவனிடத் தில் நாம் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிற படியினால், நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். துன்மார்க்கத்திலே வாழ்கின்றவன் எப்போ தும் பயப்படுகின்றான். தான் தைரியம் உள்ளவன் என்று வெளியில் காண்பித்துக் கொண்டாலும், தனக்கு கெடுதி வரலாம் என்று எப்போதும் தன் இருதயத்திலே பயப்படுவான். அவன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும். ஆனால் நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான் அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். பிரியமானவர்களே, நீங்கள் தேவனுடைய வழியிலே நடக்கும் போது நீங்கள் விரும்புகின்ற காரியத்தை தேவன் உங்களுக்குத் தருவார்.

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தினாலே எங்களை பாவமற கழுவி, நீதிமான்களாக மாற்றினீர். நான் பயப்படாமல், உம்மை நம்பி வாழ தொடர்ந்து என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கின்றேன். ஆமேன்!

# கசப்பான வேர்

**லூக்கா 6:36**
**அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே.**

தனக்கு எதிராக துரோகம் செய்த ஒருவரை குறித்த கசப்பை, ஒரு சகோதரன் தன் இருதயத்திலே வைத்திருந்தான். காலப்போக்கில் அந்த விடயத்தை அப்படியே மறந்து போனான். பல ஆண்டுகள் கடந்த பின் ஒரு நாள், அந்த சகோதரன் ஜெபித்துக் கொண்டிருக்கையில், "தேவனே நான் என்ன செய்ய வேண்டும் என நீர் சித்தமாக இருக்கின்றீர்" என தன் மனதிலே கூறினான். அந்த சமயத்திலே பல ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்த கசப்பான சம்பவம், அவன் இருதயத்தின் அடி ஆழத்திலிருந்து எழுந்தது. அந்த துரோகத்தை செய்த மனிதனை மன்னித்து அவன் குடும்பத்தை ஆசீர்வதிக்கும்படியாக தன் மனதிலே உணர்த்தப்பட்டான். அந்த இராத்திரியிலே அந்த சகோதரன் அப்படியே செய்தான். பிற்பாடு அவன் மனதிலே இருந்த பெரிய பாரம் ஒன்று இறக்கி வைக்கப்பட்டது. பிரியமானவர்களே, தேவன் எப்போதும் எங்களுடன் பேசும்படியாய் விரும்புகின்றார். ஆனால் நாங்கள் அதை கேட்பதற்கு செவியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதாவது, அவருடைய சத்தத்தை கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்து, அவர் கூறுவதை செய்யும்படியான இருதயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் நடந்த சம்பவங்களுக்கு சாட்டுப் போக்கு சொல்லி, நியாயப்படுத்தும் இதயத்துடனும், அல்லது அதை அப்படியே தட்டிக் கழித்து விடும் இதயத்துடனும் ஒருவன் இருப்பானாக இருந்தால், அவன் தேவனுடைய சத்தத்தை கேட்க முடியாமல் தன் செவியை அடைக்கின்ற மனிதனுக்கு ஒப்பாக இருப்பான். எந்த ஒரு கசப்பான வேருள்ள மரமும், மற்றய மரங்களைப் போல நன்றாக முளைக்கும், பூத்து காய்க்கும், ஆனால் அதன் கனிகள் கசப்புள்ளதாகவும், பாவனைக்கு உகந்ததாயும் இருக்காது. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள் என்று இயேசு கூறியிருக்கின்றார்.

**ஜெபம்:** அன்பான பிதாவே, என் இதயத்தில் எந்த கசப்பையும் மூடி மறைக்காமல், நீர் என் துரோகங்களை மன்னித்தது போல நானும் மன்னித்துவிட என்னை உணர்வுள்ளவனாக்கும் இரட்சகராகிய இயேசு வழியாக ஜெபிக்கின்றேன். ஆமேன்!

# மேலான சாட்சியும் அங்கீகாரமும்

**1 யோவான் 5:9**
**நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது.**

இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, அங்குள்ள யூத மதத்தார், இயேசு யார் என்று அறியும்படி, யோவான் ஸ்நான் என்ற மனிதனிடத்திலே ஆள் அனுப்பி விசாரித்தார்கள். அவன் இயேசுவே இந்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படி தேவனால் அனுப்பப்பட்ட மீட்பர் என சத்தியத்திற்கு சாட்சி பகர்ந்தான். இயேசு யூதர்களை நோக்கி: என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது. என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் பரலோகத்திலுள்ள பிதாவாகிய தேவன். அவர் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன். நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல. யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு அதென்னவெனில், நான் நிறை வேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே, பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது. பிரியமானவர்களே, இன்று தேவ ஊழியங்களை நடப்பிக்கும் பலர் இந்த உலகத்திலே சமுதாய, கிராம மட்டத்திலும், மாவட்ட, மாகாண மட்டத்திலும், தேசிய, சர்வ தேச மட்டங்களிலும், தங்கள் ஊழியங்கள் அங்கீகரிகப்பட வேண்டும் என மனிதர்களின் அங்கீகாரத்தை நாடித் தேடுகின்றார்கள். பரலோக த்தில் இருந்து வரும் அங்கீகாரமே தேவையானது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியபடி, இந்தப் பூலோகத்திலே, தேவன் செய்யு ம்படி கூறிய கிரியைகளை நாங்கள் செம்மையாய் நடப்பிப்பதே எங்க ளுக்கு சாட்சியாக இருக்கின்றது. உத்தம ஊழியன் என்று தேவன் எங்களைப் பார்த்து கூறும்படியாய், அவர் எங்களுக்கு கற்பித்ததை நாங்கள் எங்கள் வாழ்க்கையில் கிரியைகளிலே காண்பிக்க வேண்டும்.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, மனிதர்களுடைய சாட்சிகளிலும், அங்கீகாரத்திலும் நான் திருப்தியடைந்து விடாதபடிக்கும், உம்மு டைய அங்கீகாரத்தை அடையும்படி சேவை செய்ய கிருபை செய்வீராக. இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகி ன்றேன். ஆமேன்!

# ஜெயம் கொள்ளுகிறவனுக்கு...

**1 யோவான் 5:4**
**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

இந்த பூமியிலே நிலைவரப்பட்ட வெற்றி வாழ்க்கை வாழ்வதென்பதின் பொருள் என்ன? பொருளாதார செழிப்பு, பாடசாலையில் அதி விஷேட சித்தியடைதல், வேலையிலே உயர்வு, சமுதாய, தேச, சர்வ தேச மட்டத்திலே கிடைக்கும் அங்கீகரிப்பு போன்ற சுட்டிகளை இன்று மனிதர்கள் வெற்றியை அளவிட உபயோகிக்கின்றார்கள். தேசத்தின் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து நெறிமுறை அற்ற ரீதியிலே, நாங்கள் கட்டிய வரிகளை மீளப்பெற்றுக் கொள்ளுதல் பொருளாதார வெற்றியாகுமா? வேலையிலே உடன் வேலையாட்களை கடினமாக நடத்தி, செல்வாக்குகளினால் உயர்வுகளை பெறுதல் வெற்றியாகுமா? பாடசாலை பரீட்சைகளில் மற்றவர்களை பார்த்து எழுதி அதிக புள்ளிகளைப் பெற்றால் அது வெற்றியாகுமா? நீதியுடன் தேர்தலில் நிற்காமல் வெற்றி பெறுதல் வெற்றியாகுமா? இவைகளால் வரும் சமுதாய அங்கீகாரம் வெற்றியாகுமா? இவைகள் துன்மார்க் கரின் குணஇயல்புகள். இவைகளால் இந்த உலகில் வெளிப்பூச்சான தற்காலிக வெற்றி உண்டு ஆனால் பரிசுத்த வேதாகமம் கூறும் வெற்றியில் நீதியும் சமாதானமும் உள்ளடங்கி இருக்கும். அந்த வெற்றியின் பாதையில் வெற்றி பெறுபவரின் குணயியல்புகள் எதிர்-மறையாக பாதிக்கப்படுவதில்லை. ஏழு சபைகளுக்கும் கர்த்தர்தாமே தூது அனுப்பும் போது “ஜெயம் கொள்ளுகிறவனுக்கு” என்ற பத-த்தை உபயோகித்திருக்கின்றார். அந்த ஜெயம் உலக பொருட்களை யும், செல்வாக்குகளையும், அதன் அளவு கோல்களையும் உடைய வெற்றி அல்ல. மாறாக அந்த வெற்றி உள்ளான மனிதனில் வரும் மாற்றம்! பாவத்தை மேற்கொள்ளும் வெற்றி! தேவ சாயலாக மாறும் வெற்றி! இந்த பூவுலகிலே வாழும் நாட்களில், கிறிஸ்து இயேசுவுக் குள், பிதாவாகிய தேவனின் சித்தத்தை எங்கள் சொந்த வாழ்க்கை யில் நிறைவேற்றுவதே மிகப்பெரிதான வெற்றி!

**ஜெபம்:** இரக்கமுள்ள தகப்பனே, பிதாவின் சித்தம் செய்வதே எனது உணவு என்று இயேசு கூறி, உம் சித்தத்தை பூரணமாக செய்தது போல நானும் உம் சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற கிருபை செய்யும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

வியாழன்| ஐப்பசி 26 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 2: 4

# மனப்பூர்வமாய் உதவி செய்யுங்கள்

**யாக்கோபு 1:27**

**திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறை படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.**

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள் என இயேசு கூறியிருக்கின்றார். ஏழைகள் எளியவர்கள், சிறுமைப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் உங்களை தேடி வரும்படி காத்திருக்காதிருங்கள். அவர்கள் உங்கள் அபிப்பிராயங்களுக்கு ஒத்து வந்தால் மாத்திரம் உதவி செய்வேன் என்று எண்ணம் கொள்ளாதிருங்கள். நீங்கள் வசிக்கும் கிராமத்திலோ அல்லது நகரத்திலோ அல்லது நாட்டிலோ அநேகர் தேவைகளுடன் இருக்கின்றார்கள். உண்பதற்கு உணவில்லாமலும், மாற்றுவதற்கு உடுப்பு இல்லாமலும், மழைகாலங்களிலே தங்குவதற்கு இடமில்லாமலும், அடிப்படை வசதியில்லா வீடுகளிலும் அநேகர் ஆங்காங்கே வசித்து வருகின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்தால், பணத்தை விரயப்படுத்துவார்கள் என சொல்லுகின்றவர்கள் பலர். உங்கள் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எவ்வளவு காரியங்களை விரயப்படுத்தியிருப்பீர்கள். விரயப்படுத்துபவர்கள் என்று தேவன் மனிதர்களை ஆசீர்வதிக்காமல் போனால், இந்த உலகிலே யார்தான் ஆசீர்வாதத்தை பெற பாத்திரனாக இருப்பான்?

**ஜெபம்:** இரக்கமுள்ள தகப்பனே, உம்முடைய இரக்கத்தினாலே நான் உயிர் வாழ்கின்றேன். என்னிடம் உள்ளதெல்லாம் நீர் தந்தவைகள். உம்மைப்போல நானும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் படியாய் இரக்கமுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

# பிறரை நேசியுங்கள்

**லூக்கா 6:31**
**மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.**

நீங்களோ, அல்லது உண்மையாக அன்பு செய்கின்ற உங்கள் பிள்ளையோ, அல்லது குடும்பத்தினரோ அல்லது உறவினரோ, நண்பரோ, ஒரு பொல்லாப்பிலே அகப்பட்டு, தேவனுக்கு எதிராக பாவம் செய்து விட்டார் என வைத்துக் கொள்வோம். அவர்கள் மனம்திரும்பி, தேவ மன்னிப்பைப் பெற்று, தூய வாழ்க்கை வாழ வேண்டும் என்று வாஞ்சித்து, அதற்காக அதிகமாக பிரயாசப்படுவீர்கள் அல்லவா! அவர்களை அதிகமாக நேசிப்பதால், அவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் அவமானம் அடையக்கூடாது என அவர்கள் செய்த பொல்லாப்பை நீங்களாக விரும்பி விளம்பரப்படுத்தாமல் ஞானமாக நடந்து கொள்வீர்கள். நாங்கள் ஒரு குற்றத்தில் அகப்பட்டிருக்கும் போது, யாரும் எனக்கு துணையாக வந்து, இந்த குற்றத்திலிருந்து என்னை நீங்கலாக்கி விடுவிக்க மாட்டார்களா என்று ஏங்கித் தவிப்போம் அல்லவா! அப்படி யாராவது வந்து எங்களுக்கு உதவி செய்யும் போது எவ்வளவு சந்தோஷப்படுவோம். எங்கள் மனம் நன்றியால் நிறைந்திருக்கும். இப்படியான உணர்வுகள் தான் மற்றவர்கள் குற்றம் செய்யும் போது அவர்களுக்கும் ஏற்படும். எனவே எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து கூறியதைப் போல, நீங்கள் ஒரு குற்றத்தில் அகப்பட்டிருக்கும் போது, மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புவீர்களோ, அதே பிரகாரமாக நீங்களும், மற்றவர்கள் குற்றத்தில் அகப்பட்டிருக்கும் போது அவர்களுக்குச் செய்யுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங் கொடு என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். உங்கள் சத்துருக்களுக்கு இப்படிச் செய்யும்படி புத்திமதி கூறப்பட்டால், உங்கள் சகோதரருக்கும், அயலவருக்கும் எவ்வளவு அதிகமாக நீங்கள் செய்ய வேண்டும். எனவே மற்றவர்களின் விழுகையில், அவர்களை தூக்கி மறுபடியும் நிலைநிறுத்துமாறு அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபியுங்கள். உங்களால் முடிந்தவரை அவர்களை எரி நரகத்திலிருந்து விடுவிக்க பிரயாசப்படுங்கள். அவர்களின் குற்றங்களை விளம்பரப்படுத்துவதை இன்றோடு விட்டுவிடுங்கள்.

**ஜெபம்**: அன்புள்ள பிதாவே, உன்னைப்போல உன் அயலவனை நேசி என்று சொன்னவரே. அவர்களின் விழுகையில், அவர்களுக்கு உதவிக் கரம் கொடுக்க எனக்கு இரக்கமுள்ள இதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு கிறிஸ்து வழியாக ஜெபிக்கிறேன். ஆமேன்

# கலங்கும் நேரங்களில் ஆறுதல்

**சங்கீதம் 46:11**
**சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.**

ஒரு சமயம் இயேசுவின் சீஷர்கள் இயேசுவோடு படகிலே சென்றார்கள். கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். இயேசுவின் சீஷர்களில் பலருக்கு கடற்புயற்காற்று ஒரு புதிய காரியம் அல்ல, எனினும் அன்று வீசிய புயலில் அவர்களுக்கும் மரண பயம் ஏற்பட்டது. எங்கள் வாழ்க்கையிலும் சில சந்தர்ப்பங்களிலே சோர்வுகள் ஏற்படலாம், படகில் புயல் அடிப்பதைப் போல, எங்கள் வாழ்க்கையிலும் புயற்காற்று அடித்து எங்களை கலங்கப் பண்ணலாம். அப்படியாக பயம் சூழும் வேளைகளில், உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள்! வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை அறிக்கையிட்டு தேவனைத் துதியுங்கள்! சிலர் இருதயத்திலே பயத்தை மறைத்து வைத்து, சபைகளிலே தங்கள் வாழ்க்கை சமாதானம என்று கூறிக் கொள்வார்கள். பயம் உங்கள் இருதயத்தில் தங்க இடங் கொடுக்காதிருங்கள். உங்கள் அறைவீட்டிற்குள் இருந்து அந்த வாக்குத்தத்தங்களை சத்தமாய் அறிக்கையிடுங்கள். மேலே வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் எல்லாவற்றிற்கும் மேலான நாமம் "**இயேசுவின் நாமம்**" அந்த நாமத்தை அறிக்கையிடுங்கள்! "**இயேசுவின் இரத்தம் ஜெயம்**" என்று விசுவாசத்துடன் மனதிலே கூறிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் பயம் நீங்கிப் போகும். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களை ஆண்டு கொள்ளும்.

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, நான் பயப்படுகின்ற நாளிலே உம்மை நம்பி, உம்மில் சார்ந்திருக்கவும், அந்த பயத்தை முற்றும் ஜெயங்கொள்ளவும் என்னை வழிடத்தும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

# பண்பட்ட நிலம்

**நீதிமொழிகள் 12:11**
**தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான்.**

தன் வயலை உழுது, அதைப் பண்படுத்தி, பயிர்விளையும் வளமான நிலமாக்கி, நாற்றுகளை நட்டு, அதற்கு, வளர்ந்து பலன் கொடுக்க, வேண்டியவற்றை கொடுத்து பராமரிக்கும் விவசாயி, விளைச்சலின் பலனால் திருப்தியாவான். நாற்றுகளை நட்டு, அதற்கு நீர்பாய்ச்சினாலும் நிலம் வறண்டதும், வனாந்திரமுமானதாகவும் இருந்தால் அங்கே பலனை கண்டடைய முடியாது. "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான் ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்." என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். இதற்கு ஒத்ததாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு விதைப்பவன் உவமையைச் சொன்னார். எங்கள் வாழ்க்கையில் திவ்விய கனியாகிய தெய்வீக சுபாவங்கள் உருவாக வேண்டுமாயின், நிலமாகிய எங்கள் இதயம், தேவ வார்த்தையாகிய விதை விழுந்து முளைப்பதற்கு, பண்பட்ட நிலம் போல இருக்க வேண்டும். அந்த விதைகள் வளர்ந்து பலன் கொடுக்க வேண்டிய காரணிகளை தேவன் தாமே தம்முடைய ஊழியர்கள் ஊடாக கொடுக்கின்றார். தேவனே விளையச்செய்கின்றார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். உங்கள் இருதயம் வறண்டதும், வனாந்திரமுமான நிலம் போல இருந்தால், அதை வளமுள்ளதாக்க தேவனாலே கூடும். ஆனால் அதிலே எங்கள் பிரயாசமும் முக்கியமானது. எங்களை முற்றுமுழுவதாக தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்து எல்லா காவலோடும் எங்கள் இருதயத்தை காத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது எங்கள் வாழ்க்கையில் திவ்விய பலன்களால் திருப்தியாவோம்.

**ஜெபம்:** பரலோக தேவனே, உம் ஜீவவார்த்தைகள் என்னிலே பலன் கொடுக்க, என் இருதயம் பண்பட்ட நிலமாக, எல்லா காவலோடும் அதை காத்துக் கொள்ள பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக வேண்டுகிறேன். ஆமேன்!

# உதடுகளின் பலன்..

**நீதிமொழிகள் 12:14**
**பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.**

ஒரு தொழிற்சாலையில் புதிதாக சேர்ந்த கனிஷ்ட அலுவலகர், அவர் புதிய ஊழியராக இருந்ததால், குறிப்பிட்ட மாதங்களுக்கு கண்காணிப்பின் கீழ் இருக்கும் போது விடுமுறை நாட்களை எடுக்க முடியாது. ஆனால் இரண்டு கிழமை விடுமுறையை எடுப்பதற்காக, தனக்கு ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும், அதன் விவரத்தை மற்றய ஊழியர் அறிவதை தான் விரும்பவில்லை என கூறி, முகாமையாளரின் அனுதாபத்துடன் விடுமுறையைப் பெற்றுக் கொண்டார். இப்போது இவர் சொன்ன பொய்யை, உண்மை என்று நிரூபிப்பதற்காக பல யுக்திகளை இவர் கையாள வேண்டியதாயிற்று. சில ஆகாரங்களையும் மற்றவர் முன் சாப்பிட முடியாத நிலை. சில வெளியரங்க விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது. தன் நிலையை நியாயப்படுத்த வாழ்நாள் முழுவதும் இன்னும் பல பொய்களை சொல்ல வேண்டிய நிலையை தனக்கு ஏற்படுத்திக் கொண்டார். தன் வாழ்க்கையில், உண்மையை பேசுகின்றவர்கள், ஒரு சம்பவத்தைக் குறித்து அவர்களிடம் பல முறை கேட்டாலும், அதிகமாக யோசிக்காமல் உண்மையையே பேசுவார்கள். தாங்கள் எதையும் மாறுபாடாக பேசிவிடுவோம் என்ற சிந்தை அவர்களுக்கு இல்லை. சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான் பொய்ச்சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எங்கள் வாயிலிருந்து எப்போதும் நீதி வெளிப்பட வேண்டும். அந்த நீதி எங்கள் உள்ளத்தில் தெளிவாக இருக்க வேண்டும். இன்று எங்கள் கிரியைகளை நியாயப்படுத்த அடிக்கடி அநேக விடயங்களை நாங்கள் சொல்ல வேண்டிய நிலையில் இருப்போம் என்றால், நாங்கள் உண்மையை பேசுவதில் இன்னும் அதிகம் வளர வேண்டியவர்களாக இருப்போம். துன்மார்க்கனுக்கு அவன் உதடுகளின் துரோகமே கண்ணி. பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம். அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான். எனவே எப்போதும் உண்மையை பேசுங்கள். எங்கள் சொற்கள் மற்றவர்களின் காயங்களை ஆற்ற வேண்டும்.

**ஜெபம்:** அன்பின் தேவனே, என் வாயின் வார்த்தைகள் உமக்கு பிரியமாக இருக்கும்படி நான் உள்ளதை உள்ளதென்று பேசும் பெலனனைத் தாரும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

செவ்வாய் | ஐப்பசி 31 📖 மாலை வாசகம் – 1 தெசலோனிக்கேயர் 5:14

# பூரண சற்குணராயிருங்கள்

**மத்தேயு 5:48**
**ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக் கக்கடவீர்கள்.**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல பாவமில்லாத தூய வாழ்வு வாழும்படியாகவே நாங்கள் யாவரும் அழைக்கப்பட்டிருக்கின் றோம். அநியாயம் எல்லாம் பாவம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகி ன்றது. சில வேளைகளிலே நாங்கள் யாவரும் தவறி விடுகின்றோம். ஆனாலும் எங்கள் பரமபிதா சற்குணராயிருக்கின்றதாலே நாங்கள் மனந்திரும்பி, இயேசுவைப் போல மாறும்படி பொறுமையுள்ளவராக இருக்கின்றார். கர்த்தரை அறிந்த குடும்பத்திலே உள்ள ஒரு வாலிபன் களவு சம்மந்தமான குற்றத்திலே அகப்பட்ட போது, அவனுக்கு எதிராக கூட்டங்கூடி, அவனை பேச வரும்படியாக அழைத்தார்கள். அவன் வந்து பார்த்த போது, அங்கே தனக்கெதிராகவே யாவரின் பார்வையும் இருக்கின்றது என்று அறிந்து கொண்டான். நான் என்ன சொன்னாலும் என் நிலையை உணரக்கூடியவர்கள் யாரும் இல்லை என்று அறிந்து அந்த ஊரைவிட்டுப் போய்விட்டான். அந்த வாலிபன் குற்றம் செய்தது உண்மை, அந்த குற்றம் குறித்த நேரத்தில் விசாரிக்கப்பட வேண்டும். ஆனால் அவன் ஆத்துமா பாதாளத்தில் இறங்கிவிடாதபடி அவன் விழுகையில் அவனைத் தாங்க "தந்தை யைப் போல" கடிந்து கொண்டு அரவணைக்கும் கரங்கள் அங்கு இருக்க வில்லை. பிரியமானவர்களே, அநியாயம் எல்லாம் பாவம் தான். அதற்கு வேறு பெயரை கொடுத்து இனிமையாக அழைக்க முடியாது. ஆனால் இளம் வயதுள்ளவர்கள், பெலவீனமுள்ள விசுவாசிகள் தவறும் போது, எங்கள் பரமபிதா எங்களை இன்னும் ஆதரிக்கின்றது போல, அவர்களையும் ஆதரிக்க தகப்பனைப் போல, ஒரு மூத்த சகோதரத்தைப் போல உள்ளவர்கள் இருக்க வேண்டும். உடனே நியாந்தீர்க்காமல், திறந்த மனதுடன் பேசி, அன்புடன் சிட்சித்து கடிந்து கொள்ளும்படியான வழிகாட்டிகள் யாவருக்கும் தேவை. எங்கள் பரம பிதா எங்கள் துரோகங்களுக்கு உடனுக்குடன் சரிக்கட்டினால் யார்தான் நிலைநிற்க முடியும்? எனவே பிதாவாகிய தேவனைப் போல நாங்களும் பூரண சற்குணராயிருக்க வேண்டும்.

**ஜெபம்:** இரக்கமுள்ள பிதாவே, என் விழுகையில் என்னை ஆதரிக்கின்றவரே. உம்மைப் போல நானும் மற்றவர்களின் இக்கட்டான நேரங்களில், உம் சித்தம் அவர்களில் நிறைவேற, அன்புடன் பிரயாசப்பட உதவி செய்யும். இரட்சகராகிய இயேசு வழியாக வேண்டுகின்றேன். ஆமேன்!

**e-copy**

**e-copy**

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9

www.gtachurchnet.ca ☎ 416.613.2909